
"I will not forget you." Isaiah 49:15

**JESUS REDEEMS**

Nalumavadi - 628 211, Thoothukudi Dt. Tamilnadu, India.

*Mohan C. Lazarus*



## வாழ்த்துரை !

சகோதரர் பால்ராஜ் அவர்களின் “பரம குயவனின் பாத்திரங்கள்” என்ற இந்தப் புத்தகத்திற்காக தேவனைத் துதிக்கிறேன். தன்னுடைய மிகுதியான பணிகளுக்கு மத்தியிலும் ஊக்கமான ஜெபத்தினாலும், அயராத உழைப்பினாலும், கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்கென்று இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள்.

சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல், இளம் வாலிப சகோதர, சகோதரிகளுக்கும் இப்புத்தகம் மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அனைத்து கதைகளையும் அழகிய நாடகம் வடிவில் எழுதி, அதன் மூலமாக சுவிசேஷத்தையும் தெளிவாக சொல்லியிருப்பது இப்புத்தகத்தின் சிறப்பம்சமாகும்.

சிறுவர் ஊழியம் செய்கிறவர்கள் பயன்படுத்துவதற்கு இப்புத்தகம் பெரிதும் உதவியாக இருக்கும். ஆவியானவரின் துணை இல்லாமல், இப்புத்தகம் வெளிவர முடியாது. சகோதரர் அவர்களுக்கு, சிறு பிள்ளைகள் மீது கர்த்தர் கொடுத்த தரிசனத்திற்காகவும், ஆத்தும பாரத்திற்காகவும் கர்த்தரைத் துதிக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை வாசிக்கிற, பயன்படுத்துகிற நீங்கள், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். “என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக” என்ற வார்த்தைக்குக் கீழ்படிந்து ஊழியம் செய்கிற உங்களை, தேவன் தம்முடைய கிருபைகளினால் நிரப்பி பயன்படுத்துவராக !

ஊழியத்தின் பாதையில் சகோதரர் அவர்களின் முயற்சிகள் யாவையும் ஆண்டவராகிய இயேசு தாமே வெற்றியடையும்படி செய்வாராக ! இதற்காக நான் ஜெபிக்கிறேன் ! ஆசீர்வதிக்கிறேன் !!

கிருபை உங்களோடிருப்பதாக !

உங்கள் சகோதரன்,

Mohan C. L

(மோகன் சி. லாசரஸ்)

Tel : 04639 - 235 305 / 235 705 Fax : 04639 - 235 415

Email : info@jesusredeems.com Visit us : http://www.jesusredeems.com/

For 24 hours Prayer help Dial : 04639 - 235 315

என்னுரை....

ஒரு நாள் நான் தேவ சமூகத்தில் அமர்ந்திருந்த பொழுது பரிசுத்த ஆவியானவர், சிறுபிள்ளைகளுக்காக ஜெபிக்கும்படி ஏவினார். அப்பொழுது எனக்கென்று பணி செய்து முடித்த தேவ மனிதர்கள், கிறிஸ்துவுக்குள் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அனேகர் சுவிஷேத்தினிமித்தம் வரும் நிந்தைகள், அவமானங்கள், இழப்புகள், போராட்டங்கள், எதிர்ப்புகள் இவைகள் எல்லாவற்றையும் முழுச்சிலுவையாக தங்கள் தோளின்மேல் சுமந்து எனக்காக பணி செய்து கொண்டே இருக்கிறார்கள். இவர்களுக்குப் பின் எனக்காக பணி செய்ய புதிய சந்ததியை உருவாக்க வேண்டும் என்றார்.

நான் என் உள்ளம் உடைந்து அழுது கொண்டிருக்கும் பொழுது ஆவியானவர் தம் விருப்பத்தை என் உள்ளத்தில் வைத்தார். சிறுபிள்ளைகள் மத்தியில் எனக்காக பணி செய்துவரும் பணியாளர்கள் கதைகளைச் சொல்லியும், நாடகங்கள் நடித்துக் காட்டியும், அவர்கள் என் அன்பையும், என் வல்லமையையும் உணர்ந்து அறியவும், எனக்கென்று எழும்பவும் சிறுவர் கதை புஸ்தகம் ஒன்று எழுதி வெளியிட வேண்டும். இதன் மூலம் வருங்காலத்தில் இவர்களை வல்லமையான என் பணியாளர்களாக உருவாக்குவேன் என்றார்.

பரிசுத்த ஆவியானவரின் பெருமூச்சிற்கிணங்கி இந்த புஸ்தகம் வெளியிடப்படுகிறது. இதை வாங்கி ஊழியத்தில் பயன்படுத்துங்கள். வருங்கால வல்லமையான ஊழியர்களை உருவாக்குங்கள். இதன் மூலம் உங்கள் பங்கு பரலோகத்தில் சேர்க்கப்படட்டும்.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் சகோதரன்
**A.பால்ராஜ்**

# பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவன் எதிர்பார்க்கும் ஒழுங்கு | 1 |
| 2. | இரு சுமைகள் | 6 |
| 3. | மரவள்ளிகிழங்கும் மனந்திரும்புதலும் | 10 |
| 4. | உன்னைப்போல பிறரையும் நேசி | 15 |
| 5. | தொடர்ந்து செல்லும் விசுவாசமாகிய கப்பலில் செல்ல ஆயத்தமா? | 20 |
| 6. | சிறுவர்களின் ஜெபமும், ஜெயம் பெறும் குடும்பமும் | 25 |
| 7. | காகித கப்பல்களும் நோவாவின் பேழையும் | 30 |
| 8. | உயிரைக் குடிக்கும் உலகத்தின் இச்சையும், ஜீவனை கொடுக்கும் கிறிஸ்துவின் அன்பும் | 36 |
| 9. | உண்மையான கிறிஸ்துமஸ் | 41 |
| 10. | சிறுபிள்ளைகளும் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலும். | 46 |
| 11. | நீயும் தாவீதைப் போலாகலாம் | 51 |
| 12. | மன்னிப்பினாலே உண்டான ஆத்தும அறுவடை | 58 |
| 13. | வெற்றியின் இரகசியம் | 66 |
| 14. | உண்மையால் கிடைத்த ஆசீர்வாதம் | 69 |
| 15. | VBS மூலம் சிறுவர்கள் பெறும் ஆசீர்வாதங்கள் | 77 |
| 16. | நீ ஒரு பணக்கார சிறுமியா? நீயும் தேவனுக்கு ஊழியம் செய்யலாமே! | 84 |
| 17. | நீ எப்படி ஓடிக்கொண்டிருக்கிறாய்? | 90 |
| 18. | இயேசுவையே மகிமைப்படுத்துவோம். | 94 |

# 1

# தேவன் எதிர்பார்க்கும் ஒழுங்கு

புஸ்பம் வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தாள்.

ஜெசியும், மகேசும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

**ஜெசி** : ஏய், என்ன இப்படி ஓடி வர்ற?

**புஸ்பம்** : நான் வி.பி.எஸ். ல சேர்ந்துருக்கேன்.

**மகேஸ்** : இது என்ன பெரிய விஷயமா. பெருசா ஓடி வர்ற.

**புஸ்பம்** : ஆமா போன வருஷம் சேரணும்னு இருந்தேன். அப்பா வேண்டாம்னுட்டாங்க.

**ஜெசி** : எதுக்கு?

**புஸ்பம்** : அந்த ஏசுக்காரங்க ஏதாச்சும் சொல்லி நம்மள அந்த மதத்துல சேத்துக்கிடுவாங்கன்னுட்டாங்க. அதான்.

**ஜெசி** : இந்த தடவ சேர்றதுக்கு ஒண்ணும் சொல்லலயா?

**புஸ்பம்** : அப்பாவே போன்னுட்டாங்க.

**மகேஸ்** : அவரும் ஏசுகாரங்கட்ட சிக்கிவிட்டாரா

(மகேஸ் விழுந்து விழுந்து சிரித்தான்.)

**ஜெசி :** ஏன் மகேஸ் சிரிக்கிற, இப்படியெல்லாம் சிரிக்கிறது நல்லால்லப்பா.

**மகேஸ் :** இங்கபாரு ஜெசி, இந்தமாதிரி கேஸ்கங்கல்லாம் நான் நெறய பார்த்துட்டுதான் இருக்கேன்.

**ஜெசி :** போப்பா, நீயும் ஒருநாள் இயேசுவைத் தேடுவாய். அத நான் பார்க்கத்தான் போறேன்.

**மகேஸ் :** பார்ப்போமா

மகேஸ் அந்த இடத்தை விட்டு உடனே புறப்பட்டு விட்டான்.

**புஸ்பம் :** மகேஸ் ஏன் அப்படி பேசறான்.

**ஜெசி :** மகேசுக்கு இயேசுவைப் பற்றி தெரியல.

**புஸ்பம் :** அவங்க வீட்ல எல்லாரும் கிறிஸ்தவங்கதானே. பிறகு ஏன் இப்படி நடந்துக்கிறான்.

**ஜெசி :** கிறிஸ்தவர்கள் என்று தங்களை சொல்லுகிறவர் களெல்லாம் கிறிஸ்தவர்கள் கிடையாது புஸ்பம்.

ஜெசி தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு கண்ணீர் விட்டு அழுதாள்.

**புஸ்பம் :** ஏன் ஜெசி அழுதுட்டுருக்க?

**ஜெசி :** என் இயேசுவைப் பற்றி மகேஸ் அப்படி சொன்னத என்னால பொறுக்க முடியல புஸ்பம்.

**புஸ்பம் :** நீ இயேசு மேல இவ்வளவு பற்றுதலா இருக்கியே. இது எப்படி உனக்கு வந்தது. மகேசும் கிறிஸ்தவன் தானே. ஆனால் அவன் அப்படியில்லையே. இத நான் அடிக்கடி யோசித்துப் பார்ப்பேன்.

**ஜெசி** : மகேசின் குடும்பத்தினர் பணக்காரங்க. அதனால்தான் இயேசுவின் அன்பு அவர்களுக்கும், மகேசுக்கும் தெரியல.

**புஸ்பம்** : இயேசு ஏழைகளுக்குதான் கடவுளா?

**ஜெசி** : அப்படியெல்லாமில்ல இயேசு எல்லாருக்காகவும் தான் இந்த உலகத்துக்கு வந்தார்.

**புஸ்பம்** : இயேசு எதுக்காக மனுஷனா இந்த உலகத்துக்கு வரணும்?

**ஜெசி** : வேதம் சொல்லுது பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். 1 தீமோ 1:15

**புஸ்பம்** : அப்படீன்னா, பாவத்தை மட்டும்தான் இயேசு மன்னிப்பாரா? வேறு ஒண்ணும் தரமாட்டாரா?

**ஜெசி** : இதையும் கவனி, ரோமர் 8:32-ஐ வாசிக்கிறேன் கேள். தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

**புஸ்பம்** : யார், யாரை ஒப்புக் கொடுத்தது? எனக்கு ஒன்றும் புரியல கொஞ்சம் விபரமா எனக்கு சொல்லித்தா ஜெசி.

**ஜெசி** : தேவன் திரித்துவமாக இருக்கிறார். அதாவது மூன்று வித தன்மையாக இருக்கிறார். அப்படியே மூன்று விதத்தில் செயல்படுகிறார்.

**புஸ்பம்** : ஏன் அப்படி தேவனைக் குறித்து வேதம் சொல்லுது?

**ஜெசி** : மனிதன் புரிந்து கொள்ளும் விதத்தில் தேவன் செயல் படுகிறார். அதாவது; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இப்படியாக தன்னை காண்பிக்கிறார்.

**புஸ்பம்** : எனக்கு இன்னும் குழப்பமாகவே இருக்கிறது. தெளிவாக சொல்லு.

**ஜெசி** : அதாவது ஒரு குடும்பத்தில் அப்பா தான் பெரியவர். அவர் மூலமாகத்தான் அந்த குடும்பமே செயல்படுகிறது. அதுதான் ஒரு குடும்பத்தின் ஒழுங்கு. தகப்பன்தான் குடும்பத்தில் தலை. மனைவியும் பிள்ளைகளும் சரீரம். இதை கொஞ்சம் கற்பனை பண்ணிப்பார். தலை, உடல், கைகள், கால்கள் எல்லாம் சேர்ந்த பின் ஒரு முழுமனிதனாக வடிவம் பெறுகிறது. இதில் தலையில் உள்ள மூளையிலிருந்துதான் சரீரத்திலுள்ள எல்லா உறுப்புகளும் செயல்படுகிறது. இதே போல தலையாக இருக்கிற தகப்பன் சொல்லும் போதுதான், மற்ற நபர்கள் செயல்படுகிறார்கள். இது ஒரு மனிதனின் முழுவடிவத்தைப் போல இருந்து செயலாற்றுகிறது. இதே போலதான் தனக்கும் குடும்பத்தை ஏற்படுத்தி தேவன் செயல்படுகிறார். இப்படிப்பட்ட ஒழுங்கை தேவனே தனக்காக ஏற்படுத்திக்கொண்டார்.

**புஸ்பம்** : நாம் மனிதர்கள். அவர் கடவுள். அப்படீன்னா அவருக்கும் மனைவி பிள்ளைகள் எல்லாம் இருக்காங்களா.

**ஜெசி** : அதுதான் நீ இன்னும் புரியாமல் பேசுகிறாய். இன்னும் கவனி. கடவுளுக்கு மனைவியோ பிள்ளைகளோ கிடையாது. பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற மூன்று தன்மைகளையும் தேவன் குடும்ப மாக நியமித்துக்கொண்டார். அதன் மூலமாக தேவன் செயல்படுகிறார். பிதாவானவர் குடும்பத்தில் தலைவரும், குமாரன், பரிசுத்தாவி, குடும்ப நபர்கள் போலவும் செயல்படுகிறார்கள். வேதம் சொல்லுகிறது, "...பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையே யன்றி, வேறொன்றையும், தாமாய்ச் செய்யமாட்டார்;." (யோவான் 5:19)

**புஸ்பம்** : அப்படின்னா மூன்று கடவுளா?

**ஜெசி** : அதுதான் இல்லை. தேவன் தான் சிருஷ்டிகர் மூலகாரணர். குமாரன் என்பது அவருடைய சுபாவமும், அதற்குள் நிறைந்திருந்த வார்த்தையாக வெளிப்பட்டவரும், பரிசுத்தாவி என்பது

பிதாவின் எண்ணங்களும், சிந்தனைகளும். நாமும் கூட ஒரு காரியத்தை செயல்படுத்துவதற்கு நம்முடைய உள்ளான தன்மை வெளிப்பட்ட பின்பு நம்முடைய எண்ணங்களும் சிந்தனைகளுமே செயல்படுத்தி முடிக்கிறது. இதே போலதான் தேவனும் தம்முடைய குமாரனை பூமிக்கு அனுப்பி வெளிப்படுத்தி **நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்.** (சங். 104:30) தம்முடைய பரிசுத்தாவி மூலமாக தம்முடைய வேலைகளை பூமியிலே நிறைவேற்றி முடிக்கிறார். அதற்கு மனிதன் தேவைப்படுகிறான். அதற்காகத்தான் தேவனுடைய இரட்சிப்பின் திட்டமாகிய வேலையை தேவனே மனிதனாக மாறி செய்து முடித்தார். அதுதான் நம்முடைய மற்ற தேவைகளுக்கும் மாமிசத்தில் வந்த கடவுளாகிய இயேசு கிறிஸ்து போதுமானவராயிருக்கிறார். புரியுதா?

**புஸ்பம்** : இப்போது தான் எனக்குப் புரியுது. பிதா குமாரன் பரிசுத்தாவி என்பது ஒரே தேவன். ஆனால் மனித தேவைகளுக்காக மூன்று விதமாக மாறி செயல்படுகிறார்கள். அப்படித்தானே?

**ஜெசி** : சரியாகச் சொன்னாய். சரி நாம் ஜெபிப்போம். ஜெசியும், புஸ்பமும் இயேசுவை நோக்கி ஜெபம் பண்ணினார்கள். நன்றியோடு துதித்தார்கள்.

**“ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவான் 1:1)”.**

# 2

# இரு சுமைகள்

**சுப்ரமணி** : டேய் ஜோன் என்ன இன்றைக்கு மிகுந்த மகிழ்ச்சியாய் இருக்கிறாய்

**ஜோன்** : நான் என்றைக்குமே மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறேன்.

**சுப்ரமணி** : ஆமாம்டா. நான் எப்பொழுதும் உன்னை கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். எப்பொழுதும் மகிழ்ச்சி யாகத்தான் இருக்கிறாய். அந்த மகிழ்ச்சி எனக்கும் வேணும்டா.

**ஜோன்** : சுப்ரமணி, நீ எப்பொழுதுமே ஒரு சுமையை சுமந்து கொண்டு வருகிறாய். அந்த சுமை உன்னை அமிழ்த்துகிறது. வேதனைப் படுத்துகிறது. துக்கப்படுத்து கிறது. கவலை உண்டாக்குகிறது. நிம்மதியை கெடுக்கிறது. அப்படித்தானே?

**சுப்ரமணி** : ஆமாம்டா. இது யாருக்கும் தெரியாது என்று நினைத்தேன் நீ எப்படிடா கண்டுபிடித்தாய்.

**ஜோன்** : எல்லாம் அனுபவம் தான்.

**சுப்ரமணி** : (ஆச்சரியத்துடன்) நீயும் இந்த சுமையை சுமந்திருக் கிறாயா? நீ எப்படிடா இதிலிருந்து விடுதலை அடைந்தாய் எனக்கும் சொல்லுடா இதை சுமக்க நான் விரும்பலடா.

**ஜோன்** : (தலையை குனிந்து கொண்டு) அதற்கு ஒரு இடம் இருக்கிறது. அதை தெரிந்து கொண்டவர்கள் சில பேர்தான். அதில் நானும் ஒருவன் என்று சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். சரி எனக்கு நேரமாயிடுச்சி. நாளைக்கு வந்து பேசுவோம் நாளைக்கு எதிர்பார்த்திரு.

**சுப்ரமணி** : நான் காத்திருப்பேன். சீக்கிரமாகவே வந்திரு. (மறுநாள் ஜோன் சுப்பிரமணிக்காக நன்றாக ஜெபம் பண்ணினான். பின்பு சுப்பிரமணியை சந்திக்க ஆயத்தமானான்.)

<u>மறுநாள்</u>

**ஜோன்** : சுப்பிரமணி. ரெம்பநேரமா காத்திருக்கியா?

**சுப்ரமணி** : ஆமாம்டா இந்த பாரத்தை என்னால சுமக்க முடியல சீக்கிரமா இறக்கிவைக்கணும்டா.

**ஜோன்** : சரி, தனியாக இருக்கிற அந்த மரத்தடியில் உட்கார்ந்து பேசலாம் வா.
(இரண்டு பேரும் மரத்தடியில் அமர்ந்தார்கள்.) ஜோன் ஒரு முழு வேதாகமத்தை எடுத்து பக்கங்களை புரட்டி சங்கீதம் 55:22ம் வசனத்தை எடுத்துக் காட்டினான். கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாட -வொட்டார் என்ற வசனத்தைப் படித்துக் காட்டினான்.

**சுப்ரமணி** : (மிகுந்த ஆறுதலைடைந்தவனாய்,) நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார் என்று போட்டிருக்கிறதே எப்படி நீதிமானாக முடியும்?

**ஜோன்** : இதைப்பார்.

ரோமர் 8:33ம் வசனத்தை எடுத்துக் காட்டினான். "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டு கிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்கு கிறவர்". சுப்பிரமணி மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். இருளில் இருந்து வெளிச்சம் பெற்றான்.

**சுப்ரமணி** : டேய் ஜோன் அடுத்து நான் என்ன செய்ய வேண்டுடா. சீக்கிரமாய் சொல்லுடா.

**ஜோன்** : நாம் இரண்டு பேரும் ஜெபம் செய்ய போகிறோம். அப்பொழுது நீ இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்டவராக உன் நினைவில் கொண்டு வர வேண்டும். அப்பொழுது உன் நினைவில் வருகிற முன் செய்த பாவங்களையும் சொல்லிவிட வேண்டும். இப்போது இருக்கிற பாரங்களையும் சொல்லிவிட வேண்டும். சரியா.

**சுப்ரமணி** : சரி ஜெபம் செய்வோம்.

(இரண்டுபேரும் ஜெபம் பண்ணினார்கள். சுப்ரமணியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓடியது. அவனை அறியாமலே இயேசுவே என்னைமன்னியும், இயேசுவே நீர் சிந்திய இரத்தத்தால் என்னை கழுவும் என்று சொல்லி கதறி அழுதான். பரிசுத்த ஆவியானவர் மிகுந்த மகிழ்ச்சியினால் நிரப்பினார். இருவரும் எழுந்தார்கள்.)

**ஜோன்** : இப்ப எப்படி இருக்கே?

**சுப்ரமணி** : எல்லா பாரமும், பாவமும் பறந்து போயிருச்சி. சந்தோஷமாயிருக்கிறேன்.

**ஜோன்** : இதைப்பார்.
ஜோன் மீண்டும் வேதாகமத்தை திறந்து காட்டினான்.

சுப்பிரமணி நீ அந்த சுமையை இறக்கிவிட்டாய். இனி இந்த சுமையை சுமந்து செல் என்று ஏசாயா 35:10-ஐ வாசிக்கச் சொன்னான். சுப்ரமணி வாசிக்க ஆரம்பித்தான்.

**சுப்ரமணி** : கர்த்தரால் (இயேசுவால்) மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போகும்.

ஜோனை சுப்பிரமணி கட்டித் தழுவினான். ஆனந்த கண்ணீர் பெருக்கெடுத்தது. நன்றி என்று நாவு தழுதழுக்க கூறி விடை பெற்றான்.

# 3

# மரவள்ளிகிழங்கும் மனந்திரும்புதலும்

ஐந்தாம் வகுப்பு படிக்கும் ராஜா ஸ்கூல் முடிந்து சரியாக மாலை 4.35 மணிக்கு வீடு வந்து சேர்ந்தான். வீட்டில் ஒருவரும் இல்லை. ஸ்கூல் பேக்கை தூக்கி வீசினான். பசியாக இருந்ததால் சமைக்கும் பாத்திரத்தை திறந்து பார்த்தான். மரவள்ளிகிழங்கு துண்டுதுண்டாக வெட்டி நன்றாக வேகவைத்து மூடியிருந்தது.

ராஜாவின் வீட்டில், ஒரு அக்கா, அம்மா ஆகியோர்தான் உண்டு. அப்பா இல்லை. அம்மா வேலைசெய்து கொண்டுவரும் வருமானத்தில்தான் பசியை ஆற்றமுடியும். அக்கா ஒரு வீட்டில் வேலைக்கு போய் வருவாள். மிகவும் கஷ்டப்படும் குடும்பம்.

ராஜா உடுத்தியிருக்கும் டிரஸ் கூட அனேகர் இரக்கங்கொண்டு தங்கள் பிள்ளைகள் உடுத்திவிட்டு, பின்புறம் கிழிந்த நிலையில் உள்ள துணிகளை கொடுத்தவைகள்தான் அவனுக்கு எப்பொழுதுமே.

மற்ற பையன்கள் ஸ்கூலில் தின்பண்டங்களை பை நிறைய வைத்துக் கொண்டு நண்பர்களுக்கு கொடுக்கும் போது ஏக்கத்தோடு பார்ப்பான். ஆனால் யாரிடமும் கேட்டு வாங்கி தின்கமாட்டான். அவன் உள்ளத்தில் நாமும் இப்படி தின்பண்டங்களை மற்ற பையன்களுக்கும் கொடுத்து தன்வசப்படுத்தி தன்னை எல்லா பையன்களும் ஒரு தலைவராக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற எண்ணம் ஒரு ஏக்கமாக இருக்கும்.

ஆனால் வீட்டில் ஒரு பைசா கூட அவனுக்கு கொடுக்க முடியாத நிலையில் தான் இருந்தது. ராஜா எப்பொழுதுமே தனிமைபடுத்தப்பட்ட வனாக இருப்பான். இவன் எளிய குடும்பத்தை சேர்ந்தபடியால் மற்ற பையன்கள் தங்களோடு இவனை சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்.

இவன் இருதயம் எப்பொழுதுமே ஏன் இந்த உலகத்தில் வாழ் கிறோம் என்ற நினைப்பேயிருக்கும்.

அன்று சமையல் பாத்திரத்தில் வேகவைத்த மரவள்ளிகிழங்கு துண்டுகளை பார்த்தவுடன் ஒன்றை எடுத்து தின்று பார்த்தான். பசியாயிருந்த அவனுக்கு மிகவும் ருசியாக இருந்தது. மேலும் இரண்டு துண்டுகளை எடுத்து சாப்பிட்டான். இன்னும் அம்மாவும், அக்காவும் வரவில்லை. அதனால் இன்னும் தைரியமானான். தெருவை நோக்கிப் பார்த்தான். சில பையன்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். உடனே, இன்னும் சில மரவள்ளிகிழங்குகளை பாத்திரத்திலிருந்து எடுத்து டவுசர் பைக்குள் போட்டுக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்த பையன்களின் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு, அந்த பையன்கள் பார்க்கும்படி மரவள்ளிகிழங்கை தின்று கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பையன்;

**ஒருவன்** : ராஜா என்னடா திங்குற....

**ராஜா** : மரவள்ளிகிழங்கு வேக வைத்தது. நல்லாயிருக்குடா. இந்தா இதை தின்றுபார் என்று பைக்குள்ளிலிருந்து ஒரு கிழங்கு துண்டை எடுத்துக் கொடுத்தான்.

**மற்றவன்** : ராஜா எனக்கும்டா

**ராஜா** : இந்தா உனக்கும் ஒண்ணு

**மீதியுள்ள பையன்கள்** : டேய் ராஜா எங்களுக்கும் தாடா

ராஜா எல்லா பையன்களுக்கும் டவுசர் பைக்குள் இருந்ததை எல்லாம் எடுத்து கொடுத்தான். இப்போது பைக்குள் ஒன்றுமில்லை.

மீண்டும் வீட்டுக்குள் சென்று பாத்திரத்தை திறந்தான். இன்னும் நாலைந்து கிழங்கு துண்டுகளை எடுத்து டவுசர் பைக்குள் போட்டான். இப்போது பாத்திரத்திற்குள் கவனித்தான். உள்ளே நாலு துண்டுகள் தான் கிடந்தது. கதவை சாத்திவிட்டு வெளியே வந்தான். மீண்டும் பையன்களிடம் சென்று எல்லாருக்கும் கொடுத்தான்.

வேலைக்கு போன அக்கா வீடு திரும்பினாள். முகத்தை கழுவிவிட்டு தான் மதியம் வேகவைத்துபோன மரவள்ளிகிழங்கு பாத்திரத்தை திறந்தாள். அதிர்ச்சியாகிவிட்டது. அழுகையாக வந்தது. பசி ஒருபக்கம் கோபம் ஒருபக்கம். இது ராஜா பண்ணின வேலைதான் என்று தெரிந்து கொண்டாள். கதவைதிறந்து வெளியே எட்டிபார்த்தாள். பையன்களுடன் சேர்ந்து நின்று கொண்டிருந்தான் ராஜா.

**அக்கா :** ராஜா....

**ராஜா :** என்னக்கா?

**அக்கா :** இங்க வா

அக்கா கையில் பிரம்பு ஒன்றை பின்புறமாக மறைத்து வைத்திருந்தாள். ராஜா அருகில் வந்தான்.

**அக்கா :** ராஜா, பாத்திரத்திலுள்ள மரவள்ளி கிழங்கு துண்டு களை எல்லாம் எங்கே?

உண்மையை சொன்னா உன்ன ஒண்ணும் பண்ணமாட்டேன். இல்லைன்னா அடிபின்னி விடுவேன். துண்டுகளெல்லாம் எங்கே?

**ராஜா :** எனக்கெல்லாம் தெரியாது நான் எடுக்கல

**அக்கா :** அப்படியா....

கையில் இருந்த பிரம்பை எடுத்து தன்னுடைய கோபம் தணியும் வரைக்கும் அடித்தாள். ராஜா சுருண்டு விழுந்தான். பிரம்பு சுக்கு

நூறாய் ஒடிந்து விட்டது. கோபமாக ஒடிந்த பிரம்பை வீசி எறிந்து விட்டு, வெளியில் சென்று விட்டாள்.

வேலைக்கு போன அம்மாவும் உள்ளே வந்தாள். ராஜா அழுது கொண்டிருந்தான். சரீரமெல்லாம் தடிப்பு தடிப்பாக வீங்கியிருந்தது.

**அம்மா :** ராஜா ஏண்டா அழற? யாரு இப்படி அடிச்சா....?

சொல்லுடா யாரு உன்ன அடிச்சது....?

(அப்போது அக்கா வேகமாக உள்ளே வந்தாள்.)

**அக்கா :** சோறு ஆக்கி வைக்க அரிசி இல்லேன்னு ஒரு கிலோ மரவள்ளி கிழங்க வாங்கி வேகவச்சிட்டு வந்து எல்லாருமா சேர்ந்து திங்கலாம்னு வேலைக்கு போய்ட்டு வந்து பார்த்தா பாத்திரத்தில் கிழங்கையே காணோம். கிழங்க எங்கடாண்ணா தெரியாதுங்கறான். அதான் பிரம்ப எடுத்து விளாசிட்டேன்.

அம்மாவும் அழுதாள். வீட்டில் உள்ள கஷ்டத்தை நினைத்து ஏன் இந்த உலகத்தில் வாழவேண்டும் என்று வெறுப்படைந்து அழுது கண்ணீர் விட்டாள்.

அன்று இரவு மூன்று பேருமாக நான்கு மரவள்ளிகிழங்கின் துண்டு களையும் பகிர்ந்து சாப்பிட்டு விட்டு படுத்துவிட்டார்கள்.

விடிந்தது. வழக்கம் போல அம்மா வேலைக்கு சென்றுவிட்டாள். அக்காவும் வேலைக்கு சென்றுவிட்டாள். ராஜா தனிமையாக உட்கார்ந்து யோசித்தான். பின்பு நேற்று நடந்த சம்பவத்தை நினைத்து அழுதான். பின்பு ஸ்கூல் பேக்கை எடுத்து தோழில் போட்டுக்கொண்டு துக்கத்தோடு ஸ்கூலுக்கு நடந்தான். திடீரென்று காற்றில் பறந்துவந்த காகிதத் துண்டு அவன் முகத்தில் வந்து மோதியது. ராஜா அதை கையில் எடுத்து பார்த்தான். அதில் **நீங்கள் துக்கமுகமாய் நடந்து போகிறது என்ன** (லூக் 24:17) என்ற வசனத்தை கண்டான். அது அவனுக்கு பக்கத்தில் நின்று யாரோ காதில் பேசியது போல இருந்தது. திடுக்கிட்டான்.

மீண்டும் ஒரு பேப்பர் துண்டு அவன் பக்கத்தில் வந்து விழுந்தது. அதையும் எடுத்தான். அதில் பெரிய எழுத்தில் **ஏன் அழுகிறாய் யாரைத் தேடுகிறாய்** (யோ 20:15) என்று எழுதியிருந்தது. அவன் கண்ணீர் விட்டு அழுதான். தன் தவறை உணர்ந்தான். அன்று ஸ்கூல் முடிந்தவுடன் வீட்டுக்கு வந்தான். அம்மாவும், அக்காவும் சீக்கிரமாக வந்து விட்டார்கள்.

**அக்கா** : ராஜா, அக்கா அடிச்சஇடமெல்லாம் வலிக்குதாப்பா....?

ராஜாவின் மேல் சட்டையை கழற்றிவிட்டு தடவிப் பார்த்தாள். வீக்கம் குறைந்திருந்தது.

**ராஜா** : உடம்பு வலிக்கலக்கா, என் இதயம் தான் வலிக்குது

நம் வீட்டில் உள்ள வறுமையைப் பற்றி நினையாமல் தவறு செய்து விட்டேன்கா. என்னை மன்னித்து விடுக்கா என்று அழுதான். பின்பு காற்றில் பறந்து வந்த இரண்டு பேப்பர் துண்டுகளை அக்காவிடமும் அம்மாவிடமும் காட்டினான். வாசித்தவுடன் அக்கா, அம்மா, ராஜா மூன்று பேரும் ஓவென்று அழுதார்கள். அப்பொழுது பக்கத்திலிருந்த தேவாலயத்தில் நேரத்தை விளக்கி சொல்லும் ஒலி பெருக்கியிலிருந்து அவர்கள் கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் (வெளி 21:4) என்ற வசனம் ஒலித்தது.

ராஜா, அக்கா, அம்மா மூன்றுபேரும் முழங்கால் படியிட்டு ஜெபம் செய்தார்கள். ராஜா தன் பாவங்களை அறிக்கை செய்து ஏசுவினிடத்தில் மன்னிப்பை பெற்றுக்கொண்டான்.

# 4

## உன்னைப்போல பிறரையும் நேசி

சுதாவும் டேவிட்டும் ஸ்கூல் நண்பர்கள். அன்று சனிக்கிழமை என்பதாலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதாலும் சண்டே கிளாஸ்க்கு போறதைப் பற்றி பேசிக்கொண்டு வந்தார்கள்.

**டேவிட் :** சுதா....

**சுதா :** என்ன டேவிட்?

**டேவிட் :** ஈஸ்டர் பண்டிகை நாடகத்துக்கு எனக்கு பேதுரு வேடம்னு டீச்சர் சொல்லியிருக்காங்க.

**சுதா :** அப்படியா, நீ நல்லா வேதம் வாசித்து பாட்டு பாடுறதாலதான் உனக்கு இந்த ஆக்ட் பண்ண சொல்லியிருக்காங்க.

**டேவிட் :** எனக்கு இந்த ஆக்ட் பிடிக்கல

**சுதா :** ஏன்....?

**டேவிட் :** பேதுரு இயேசுவை மறுதலித்தார். அப்படி நடிக்க எனக்கு பிடிக்கல.

**சுதா :** இது வெறும் நடிப்புதானே....?

**டேவிட் :** இல்ல, இந்த பகுதி என்னை ரொம்பவும் காயப்படுத்தியிருக்கு.

டேவிட் கண்ணீர் விட்டு அழுதான்.

**சுதா** : ஏன் அழற டேவிட்?

**டேவிட்** : ஆமா, இயேசுவோடு உண்டு, உறங்கி, அவர் செய்த அற்புதங்களில் எல்லாம் கூடயிருந்து கண்ணாரகண்டும் பின்பு, இயேசுவை மறுதலித்ததை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அப்படி ஒரு துரோகியாக நடிக்க வேண்டியது இருக்கேன்னுதான் அழறேன்.

**சுதா** : அப்படின்னா, நீ வேண்டாம்னு சொல்ல வேண்டியது தானே.

**டேவிட்** : நான் சொன்னேன். டீச்சர் நீதான் நடிக்கணும்னு சொல்லிட்டாங்க. வேற வழியில்லாம ஒத்துக்கிட்டேன்.

**சுதா** : **அப்படிப்பார்த்தா, பேதுருவைத்தான் இயேசு அதிகம் நேசித்தார். பேதுருவிடம் இயேசுவை அறிகிற அறிவு அதிகம் இருந்தது.**

**டேவிட்** : எப்படிச் சொல்றே....?

**சுதா** : லூக்கா எழுதின சுவிசேஷத்தில் 24:30-35 வரை வாசித்துப்பார். **“அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்.**

**அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்.**

**அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி : வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டின பொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு,**

**அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக்கண்டு :**

**கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக்கேட்டு,**

**வழியில் நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்".**

இயேசு உயிரோடு எழுந்த பின்பு, இயேசுவை அவர்தான் என்று அறிந்தவர்களில் சீமோன் பேதுருவும் ஒருவர் என்பது புரியும். பேதுரு இயேசு மீது அதிக அன்புள்ளவராக இருந்தார்.

**டேவிட்** : பேதுரு இயேசுவின் மேல் அதிக அன்புள்ளவராக இருந்தார் என்பதை என் இருதயம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

நீ மத்தேயு 26:74-ஐ வாசித்துப்பார்.

**"அப்பொழுது அவன் : அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்".**

பார் இதுதான் என்னை அதிக வேதனைப்படுத்தியது.

**சுதா** : டேவிட் நீ இயேசு கிறிஸ்துவின் கிருபையை இன்னும் அறியாமலிருக்கிறாய்.

**டேவிட்** : நான் சொல்வதை நீ கொஞ்சமும் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறாயே.

**சுதா** : மத்தேயு 26:75-ஐ வாசி. இன்னும் உனக்கு நன்றாக விளங்கும். பேதுரு தன் நிலை குறித்து மனம் வருந்தினார்.

**"அப்பொழுது பேதுரு : சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில்**

**சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்"**

மத்தேயு 26:75ஐ வாசித்த டேவிட் மௌனமாக யோசிக்க ஆரம்பித்தான். அப்பொழுது ஆவியானவர் அவனோடு இடைப்பட்டார். **"அதற்குக் கர்த்தர் நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு ராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே. வலதுகைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிப்பேனோ என்றார்". (யோனா 4:10,11).**

**சுதா** : என்ன யோசிக்கிறாய்?

**டேவிட்** : ஆமா சுதா, இயேசுவின் அன்பை அறியாதவனாகவும் உணராதவனாகவும் என்னை மாத்திரமே நீதிமான் என நான் நினைத்துக் கொண்டதினாலும் உன்னைப் போல பிறரையும் நேசி என்ற இயேசு கிறிஸ்துவின் அன்பின் வாக்குத்தத்தங்களை நான் மறந்ததினாலும் இப்படி பேசிவிட்டேன் சுதா என்னை மன்னித்துவிடு.

**சுதா** : என்னிடம் மன்னிப்பு கேட்காதே. உனக்காக இரத்தம் சிந்தியிருக்கிறாரே உலகத்தின் பாவங்களை தன்மேல் ஏற்றுக் கொண்ட தேவ ஆட்டுக்குட்டி அவரிடம்போ. அவர் உன்னை மன்னிப்பார்.

**டேவிட்** : சுதா நீ என்னை திருத்திவிட்டாய். உன்னைப்போல இன்னும் அனேக பிள்ளைகள் தேவனுக்காய் எழும்ப வேண்டும் என்று வாஞ்சிக்கிறேன்.

டேவிட்டும் சுதாவும் முழங்கால் படியிட்டனர். சுதா ஜெபம் செய்தாள்.

அன்பின் இயேசுவே உம்முடைய அன்பு சிலுவையிலே வெளிப்பட்டது. நாங்கள் இன்னும் அறியாதிருந்தோம். இப்பொழுது நீர் உணர்த்தியிருக்கிறீர் அதற்கு நன்றி. டேவிட்டை உம்முடைய கரத்தில்

தருகிறேன். அவனுடைய மனதிலே பேதுரு உம்மை மறுதலித்த பாரத்தை வைத்து அவன் மூலமாக இன்னும் அநேகம் பேர் பேதுருவைப் போல இடத்துக்கு தகுந்தாற்போல தங்களை மாற்றிக் கொண்டு உம்மை மறுதலிக்கிற அனேக கிறிஸ்தவர்கள் உண்டு என்பதை வேதனையோடு சொல்லுகிறீர். ஆண்டவரே நானும் டேவிட்டும் உணர்ந்து எங்களை மன்னிக்க வேண்டுகிறோம். இதே போல இப்படி மறுதலிக்கிற கிறிஸ்தவர்களையும் நீர் மன்னிக்கும்படி வேண்டுகிறோம். இன்னும் டேவிட்டை ஈஸ்டர் நாடகத்திலே பேதுரு கதாபாத்திரத்திலே திறமையை வெளிப்படுத்தி நடிக்க உதவி செய்யும்படி ஜெபிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேளும் பிதாவே. ஆமென்.

# 5

# தொடர்ந்து செல்லும் விசுவாசமாகிய கப்பலில் செல்ல ஆயத்தமா?

மோசேயும் தங்கராஜீ-ம் சன்டே கிளாஸ் நண்பர்கள். இருவரும் ஏழாம் வகுப்பு படிப்பவர்கள்.

இரண்டு பேருமே வேதாகமத்தை தினசரி ஒழுங்காக வாசிப்பவர்கள் தான்.

அன்று ஞாயிறுபள்ளிக்கு சென்றுவிட்டு திரும்பும்போது இரண்டு பேரும் பேசிக்கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

**தங்கராஜ்** : மோசே, உனக்கு மோசேன்னு ஏன் பெயர் வச்சாங்க?

**மோசே** : அது நான் எங்கம்மா வயித்துல இருந்து குறை மாதத்தில் பிறந்தேனாம். மூணு மாதம் ஆஸ்பத்திரியிலே வச்சிருந்தாங்களாம். அப்ப அங்க உள்ள நர்சுங்கதான் என்னை நல்லா பராமரிச்சி அன்பா சொந்த பிள்ளையைப் போல வச்சிருப்பாங்களாம். அதான் மோசேன்னு பெயர் வச்சதா அம்மா அடிக்கடி சொல்லுவாங்க.

**தங்கராஜ்** : உன் பெயருக்கும், நீ குறை மாதத்தில் பொறந்ததுக்கும் நர்சுங்க உன்னை அன்பாக பராமரித்ததற்கும் என்ன ஒற்றுமை. அதற்காக உனக்கு ஏன் மோசேன்னு பெயர் வைக்கணும்.

**மோசே :** அம்மா சொல்லுவாங்க. மோசேய அவங்கம்மா தண்ணீருல நாணல் பெட்டில வச்சி அனுப்பினது போல என்னையும் ஒரு பெட்டி மாதிரியிருக்கிற தொட்டியில தான் வச்சி பாதுகாத்தாங்களாம்.

**தங்கராஜ் :** மோசே தண்ணீரில் மிதந்து போனாருன்னு வேதம் சொல்லுது. நீ ஒண்ணும் தண்ணீரில் மிதந்து போகலியே.

**மோசே :** அம்மா சொன்னாங்க மோசேயுடைய அம்மா ஒவ்வொரு வினாடியும் மோசே தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கும் போது தண்ணீர் நாணல் பெட்டிக்குள்ள புகுந்து பெட்டி தண்ணீரில் அமிழ்ந்து விடுமோ என்று பயந்து, பயந்து ஆண்டவரை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டே இருந்திருப்பாங்கன்னாங்க.

**தங்கராஜ் :** சரி உங்கம்மாவுக்கு நீ அப்படி ஒண்ணும் தண்ணீரில மிதக்கல. அவங்க பயப்படவேண்டிய அவசியமில்லையே. எனக்கு ஒண்ணும் புரியலப்பா.

**மோசே :** டேய் தங்கராஜ், நீ வேதபுஸ்தகத்தை படிக்கும் போது எப்படி படிக்கிற. மோசேயிருந்த நாணல் பெட்டி பார்வோன் குமாரத்தியின் கையில் வந்து சேரும் வரைக்கும் என்ன ஆகுமோன்னு பயந்து ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தது மாதிரி எங்கம்மாவும் ஒரு உணர்வுக்குள்ளானாங்களாம். ஒவ்வொருநாளும் ஏன் ஒவ்வொரு நிமிஷமும் மரணம் என்னை நெருங்கிக்கிட்டே இருந்ததாம். எப்போதும் ஜெபம் பண்ணிக் கொண்டேயிருந்தாங்களாம், புரியாதா.

**தங்கராஜ் :** சரி, நர்சுங்க உன்னை அன்பா பராமரித்ததுக்கும், பார்வோன் குமாரத்திக்கும் என்ன ஒற்றுமையிருக்கு?

**மோசே :** நான் சின்ன பையனாயிருக்கும்போது ரொம்ப அழகாயிருப்பேன்னு அம்மா சொல்லுவாங்க.

**தங்கராஜ் :** எல்லா சின்னப் பிள்ளைங்களும் தான் அழகாயிருக்காங்க. அதனால எல்லாரும் மோசேயா மாற முடியுமா, எல்லாரையும் பார்வோன் குமாரத்தி வளர்ப்பாங்களா.

**மோசே :** அதான், ஆண்டவர்தான் அப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்கியிருக்க முடியும்.

**தங்கராஜ் :** சரி பார்வோன் குமாரத்தி நம்முடைய ஆண்டவரை அறியாதவங்க. அவங்கதான் மோசேயை வளர்த்தாங்கன்னு வேதம் சொல்லுது.

**மோசே :** ஆமாடா, அதேமாதிரிதான் நம்ம ஆண்டவரை அறியாத நர்சுங்க மூலமா என்னையும் ஆண்டவர் வளர்த்திருக் காருன்னு அம்மா சொல்லுவாங்க.

**தங்கராஜ் :** ம்... இதெல்லாம் என்னை யோசிக்க வைக்குதே தவிர சரியான விடை எனக்கு கிடைக்கல.

**மோசே :** பிலிப்பியர் 2:13 "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" என்று வேதம் சொல்லுகிறதை கவனி.

(மோசே வேத புத்தகத்தை விரித்து வசனத்தைக் காட்டினான்)

இப்பொழுது தங்கராஜின் முகத்தில் ஒரு தெளிவு ஏற்படத்துவங்கியது. தங்கராஜ் மெல்ல சிரித்துக் கொண்டு;

**தங்கராஜ் :** டேய் எனக்கு இப்போதுதான் மெல்ல புரிய ஆரம்பிக்குது, இன்னும் சொல்லுடா.

**மோசே :** அம்மா சொன்னாங்க மோசேயிருந்த நாணல் பெட்டி பார்வோன் குமாரத்தியிடம் சேரும் இடைவெளி காலம் விசுவாச நிலையில் இருக்கும் காலம்னு சொன்னாங்க.

**தங்கராஜ் :** அப்படியா. இப்பதான் விசுவாசம்னா எப்படின்னு எனக்கு ஒரு வெளிச்சம் கிடைக்குது.

**மோசே :** இப்படித்தான் விசுவாசித்து ஒரு காரியத்தை செய்யும் போதும் என்ன நடக்குமோ, எப்படி ஆகுமோ என்று மரண பயத்தை

போன்ற பயம் திகில் நம்மை தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கும்னு அம்மா சொல்லுவாங்க.

மோசே, யாக்கோபு 4:14ஐ காட்டினான். அதில் நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்-கிறதே.

**தங்கராஜ்** : இப்ப நல்லா தெளிவா புரியுதுடா. அப்படின்னா அந்த நாணல் பெட்டி பார்வோன் குமாரத்தியிடம் சென்றடைவதுதான் தேவ சித்தமாயிருந்ததுன்னு சொல்லு. அதுவரைக்கும் இது எப்படி ஆகும் என்பது போல் தான் நமக்கும் கேள்வியாயிருக்கும். அப்படித்தானே.

**மோசே** : ஆமா, அதற்கு பின்புதான் எகிப்திலே இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் தேவ செயல் ஆரம்பமானது. தேவன் பொறுமையாய் காரியத்தை செய்து தேவ ஜனங்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கினார்னு தான் அம்மா சொன்னாங்க.

**தங்கராஜ்** : எல்லாருக்கும் அந்த விசுவாசம் இல்லையே.

**மோசே** : எங்கம்மா அப்படி விசுவாசமா ஜெபம் பண்ணி என்னை ஆண்டவரிடத்தில் ஒப்புக் கொடுத்தேன்னாங்க புரியுதா.

**தங்கராஜ்** : வாழ்க்கையில் எந்த பகுதியானாலும் விசுவாசமும் பொறுமையும் மிக அவசியம் என்ன அப்படிதானே.

**மோசே** : ஆமா சிலர் இந்த விசுவாச வாழ்க்கையில் உலகத்திற்குள் சென்று அழிந்து போகிறார்கள். கர்த்தர் வைத்திருக்கிற நன்மைகளை பெற முடியாமல் போகிறார்கள்.

**தங்கராஜ்** : அப்படியானால் நானும், நீயும் எல்லா கர்த்தருடைய பிள்ளைகளும் விசுவாசம் என்கிற கப்பலில் தான் பிரயாணம் செய்கிறோம் என்று சொல்லு.

**மோசே :** 1 தீ 1:19 இப்படி சொல்லுகிறது. .....அவர்கள்.... விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினார்கள் என்று எழுதியிருக்கிறதே.

**தங்கராஜ் :** அதான் எபி 12:1 இப்படி சொல்லுகிறதோ

....விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமை யோடே ஓடக்கடவோம்.

**மோசே :** இப்ப புரியுதா என் பெயர் மோசே என்பதற்கு பதில். வீடும் வந்து சேர்ந்தது. இருவரும் விடை பெற்றுக் கொண்டு சென்றனர்.

# 6

# சிறுவர்களின் ஜெபமும் ஜெயம் பெறும் குடும்பமும்

சுகுமார், ரூபன் இரண்டு பேரும் வகுப்பு நண்பர்கள். மாலை ஸ்கூல் முடிந்து இரண்டுபேரும் சைக்கிளில் மெதுவாக வந்து கொண்டிருந்தனர்.

**சுகு**: ரூபன் நாளை ஞாயிற்றுக்கிழமை நீ சர்ச்சில இருப்ப நான் என்ன செய்யணும்னு புரியல.

**ரூபன்** : நீயும் என்னோட சர்ச்சிக்கு வற்றியா அங்கே ரொம்பவும் நல்லாயிருக்கும்.

**சுகு**: அப்பா சத்தம் போடுவாங்க சர்ச்சுக்கு எல்லாம் போகக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க. நான் வரலப்பா.

**ரூபன்** : ஒரு தடவை வந்தீன்னா தான் உனக்கு அங்கே நடக்கும் ஆராதனை எப்படியிருக்குன்னு தெரியும். ரொம்ப சந்தோஷ மாயிருக்கும் தெரியுமா.

**சுகு**: சரி வீடு வந்தாச்சு நாளைக்கு விடியட்டும் பின்பு பார்க்கலாம்.

இரண்டு பேரும் விடை பெற்றுச் சென்றனர்.

மறுநாள் காலையில் ரூபன் வீட்டில்

**ரூபன் அம்மா** : டேய் ரூபன் எழுந்திரு மணி எட்டு ஆச்சு. சர்ச்சிக்கு போகலையா?

**ரூபன்** : ம்....ம்... மணி எட்டாயிருச்சா!

ரூபன் வேகமாக எழுந்து குளித்து டிரஸ் பண்ணி சர்ச்சிக்கு புறப்பட்டான். போகும் போது சின்ன ஜெபம் செய்தான். அப்பொழுதான் சுகுமார் நினைவு வந்தது.

**ரூபன்** : இயேசப்பா சுகுமாரையும் இரட்சித்து ஆசீர்வதியும் நான் இப்போது அவனை பார்க்க செல்கிறேன். உமக்கு சித்தமானால் என்னோடு கூட உம்முடைய ஆலயத்துக்கு அனுப்பி வையும். இந்த ஜெபத்தைக் கேட்டு அப்படியே நீர் செய்ததினால் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே. ஆமென்.

ரூபன் வேதாகமத்தை எடுத்துக் கொண்டு சுகுமாரைத் தேடி அவன் வீட்டிற்குச் சென்றான்.

**சுகுமார் அம்மா** : என்னப்பா ரூபன் சுகுமாரைப் பார்க்கணுமா

**ரூபன்** : ஆமா, அவன் எங்க இருக்கான்னு சொல்லுங்க ஆன்ட்டீ.

**சுகுமார் அம்மா** : டேய் சுகுமார், என்ன பண்ணிகிட்டு இருக்க, ரூபன் வந்துருக்கான்டா.

**சுகுமார்** : இதோ வந்துட்டேம்மா

**ரூபன்** : ஆன்ட்டீ சுகுமாரை என்னோட சர்ச்சிக்கு அனுப்புங்க. அவனுக்கு நல்லா படிப்பு வரும்படியா ஜெபம் செய்வாங்க.

**சுகுமார் அம்மா** : ஜெபம் செய்வாங்களா. அப்படின்னா கூட்டிட்டு போ. அவங்க அப்பா வர்றதுக்குள்ள வந்துருங்க.

**ரூபன்** : எத்தனை மணிக்கு வருவாங்க?

**சுகுமார் அம்மா** : ஒரு மணிக்கு மேல வந்துடுவாரு. அதுக்குள்ளாக வந்துருங்க சரியா.

சுகுமாரும் வந்து அவர்களுடன் நின்று கொண்டான்.

**சுகுமார்** : என்ன ரூபன், எப்ப போகணும்?

**ரூபன்** : உடனே போக வேண்டியதுதான் ரெடியாகு.

**சுகுமார்** : இதோ கிளம்பிட்டேன்.

சுகுமார் வீட்டிற்குள் உள்ளே ஓடிப்போய் டிரெஸ் பண்ணி புறப்பட்டு வந்தான்.

**ரூபன்** : நாங்க புறப்படுகிறோம் ஆன்ட்டீ

**சுகுமார் அம்மா** : ஒரு மணிக்கு முன்னே வந்துருங்க சரியா

**ரூபன்** : சரி, ஆன்ட்டீ

ரூபனும், சுகுமாரும் போகும் போது பேசிக் கொண்டே சென்றனர்.

**சுகுமார்** : டேய், அதோ பாண்டியும், கோபாலும் வர்றாங்கடா.

**பாண்டி** : டேய் சுகு, எங்கடா கிளம்பிட்டீங்க

**சுகுமார்** : ரூபனோட கூட நானும் சர்ச்சிக்கு போறேன்டா. நீங்களும் வர்றீங்களா.

**கோபால்** : சரி போவோம். நானும் வர்றேண்டா.

**பாண்டி** : எங்க பக்கத்து வீட்டுக்காரக்கா இயேசுவ பத்தி எனக்கு சொல்லியிருக்காங்க. இயேசுதான் உண்மையான கடவுள். அவர்தான் உலகத்திலுள்ள எல்லா மனிதருடைய பாவத்துக்காகவும் அடிக்கப் பட்டு, நொறுக்கப்பட்டு, காயப்பட்டு, வேதனையையும் துன்பங்களையும் சகிச்சி, சிலுவையில் தன்னைத் தானே அறைய ஒப்புக்கொடுத்தார்ன்னு சொன்னாங்க. அதன் மூலமாகத்தான் நமக்கு பாவ மன்னிப்பும், ஆசீர்வாதமும் உண்டாக இரத்தம் சிந்தினார்ன்னு சொன்னாங்கடா.

அதுலருந்து எனக்கு எப்படியாகிலும் சர்ச்சிக்கு போகணும்னு ஒரே ஆசையா இருக்கும்.

**கோபால்** : ஆமாடா எனக்கும் அதுதான் பிடிக்குது. ஞாயிற்றுக்கிழமை தோறும் சன்டேகிளாஸ் மற்றும் ஆராதனை இப்படி நல்லாயிருக்கும்பாங்க. எனக்கும் இதுதான் நல்லாயிருக்கு.

**சுகுமார்** : எங்கம்மாவும் ஒரு வேதபுஸ்தகம் வச்சிருக்காங்க. எங்கப்பா இல்லாதப்ப ரகசியமா படிப்பாங்க. நான் பார்த்திருக்கிறேன். அப்பாவுக்குதான் பிடிக்காது.

**ரூபன்** : இயேசப்பாதான் இந்த உலகத்தையே படைத்து இதில் உள்ள சகலத்தையும், மனிதனையும் அவர்தான் உருவாக்கினார். அவருக்குதான் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனையும், மனுஷியையும். ஒவ்வொரு சிறு பிள்ளைகளையும் குறித்து கவலையும் பாரமும் உண்டு. இன்றைக்கு மனுஷர் மேல் பிசாசு ஆதிக்கம் செலுத்தி வியாதிகளையும், தோல்விகளையும், நஷ்டங்களையும், வேதனை களையும், சோர்வுகளையும், பயத்தையும் கொண்டு வருகிறான். குடும்பங்களிலே சண்டைகள், குழப்பங்கள், சமாதான குறைச்சல் எல்லாமே பிசாசுதான் ஒவ்வொருவர் மேலும் அனுப்புகிறான்.

**கோபால்** : ஆமாடா எங்கவீட்ல கூட அடிக்கடி அம்மாவும் அப்பாவும் சண்டை போடுவாங்க. எனக்கும் என் தங்கைக்கும் ரொம்பவும் மனவேதனையாயிருக்கும். இதெல்லாம் பிசாசுதான் கொண்டுவர்றான்ங்கிறது இப்பதான் புரியுது.

**பாண்டி** : எங்க வீட்டிலேயும் இதே மாதிரிதாண்டாயிருக்கு. எங்கப்பா ரொம்ப பக்தி மாதிரியிருப்பாரு. ஆனா அவரு பண்றது எனக்கு கொஞ்சமும் புடிக்கலடா.

**சுகுமார்** : எங்க வீட்லேயும் சண்டைதான். எங்கம்மா பொறுமையா யிருப்பதால அப்பா சண்டைக்கு வந்தாலும் சீக்கிரம் சரியா போகும்.

**ரூபன்** : டேய், சுகு உங்கம்மா வேதபுஸ்தகம் வாசித்து ஜெபம் பண்றதால தான் சரியா போவுது. இப்ப புரியுதா.

**சுகுமார், பாண்டி, கோபால்:** ஆமா இப்பதான் நல்லா புரியுது.

**பாண்டி :** அப்படின்னா சுகுமார் அம்மா வேதம் வாசித்து ஜெபம் பண்றதால சமாதானம் வருதுன்னா நாமும் ஆளுக்கொரு வேத புஸ்தகம் வாங்கி வாசித்து ஜெபம் பண்ண வேண்டியது தான். அப்பதான் சண்டையை கொண்டு வர்ற பிசாசு ஓடுவான். சரியா.

**சுகுமார், கோபால் :** அதான்டா சரி, ரூபன் எங்களுக்கு வேத புஸ்தகம் வாங்கிதர்றது உன் பொறுப்பு.

**ரூபன் :** சரி அம்மாகிட்ட சொல்லி வாங்கித்தர்றேன். இப்ப நம்ம எல்லாருமா சேர்ந்து ஜெபிப்போம். நான் ஜெபம் செய்வேன். நான் சொல்ல சொல்ல நீங்கள் இருதயத்தில் உணர்ந்து நன்றி சொல்லணும். முடிவில் ஆமென் என்று சொல்ல வேண்டும் சரியா.

**சுகுமார், பாண்டி, கோபால்:** சரி

**ரூபன் :** இயேசப்பா, சுகுமார், பாண்டி, கோபால் நாங்கள் உம்மை சிலுவையில் அறையப்பட்டவராக காண்கிறோம். உம்முடைய தலையில், கைகளில், கால்களில், விலாவில் இருந்து வடியும் இரத்தம் எங்கள் பாவங்களையும் எங்கள் மேல் பிசாசு கொண்டுவருகிற சாபங்களையும் அழித்து எங்களை பரிசுத்தப்படுத்தி எங்களையும் எங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதியும். குடும்பத்தில் அப்பா, அம்மா சண்டையை கொண்டுவருகிற பிசாசை விரட்டி விடும். இயேசுவின் நாமத்தில் பிசாசே எங்கள் குடும்பத்தைவிட்டு போ என்று உனக்கு கட்டளை கொடுக்கிறோம். இந்த ஜெபத்தைக் கேட்டு இயேசுவே நீர் அப்படியே செய்ததினால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

**சுகுமார், பாண்டி, கோபால் :** ஆமென்

பின்பு நான்கு பேரும் சர்ச்சுக்குள் நுழைந்தனர். ஆராதனையும் ஆரம்பமானது.

# 7

# காகித கப்பல்களும் நோவாவின் பேழையும்

அன்று ஞாயிறு. பள்ளி விடுமுறை நாள். நல்ல மழை பெய்திருந்த படியால் ஆங்காங்கே ஊருக்கு புறம்பான இடங்களில் தண்ணீர் வாய்க்கால் போல வேகமாய் ஓடிக் கொண்டிருந்தது. சுமதியும், மாலதியும் காகித கப்பல்களை செய்து தண்ணீரில் விட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். சுமதியின் முகத்தில் ஆவலும் எதிர்பார்ப்பும் தெரிந்தது. மாலதி கேட்டாள்.

**மாலதி** : என்ன சுமதி பேசாமல் இருக்கிறீயே என்ன?

**சுமதி** : ஒன்னுமில்ல.

தண்ணீரின் ஓடும் வேகம் குறைய ஆரம்பித்தது. இப்பொழுது இரண்டு பேரும் தண்ணீரில் அனுப்பிய கப்பல்கள் இரண்டும் லேசாக அசைந்து, அசைந்து மெதுவாக நகர்ந்து கொண்டு சென்றது. கப்பல்கள் செல்ல செல்ல இரண்டுபேரும் மெதுவா நகர்ந்து, நகர்ந்து சென்றார்கள். முடிவில் பள்ளமான ஒரு இடத்தில் தண்ணீர் வடிந்து தண்ணீரின் அளவு உயர்ந்து கொண்டேயிருந்தது. இரண்டு கப்பல் களும் அதற்குள் வந்து சேர்ந்தன. அந்த தண்ணீர் தேக்கத்தின் மைய பகுதியில் ஒரு மேட்டு பகுதியையும் மூடி சமநிலை அளவு நிரம்பி தழும்பி நின்றது. இப்போது தண்ணீர் வரத்து நின்றுவிட்டது. இரண்டு கப்பல் களும் சமுத்திரத்தில் கப்பல் மிதக்கிறது போல தோற்றம் அளித்தது. லேசான காற்று வீச ஆரம்பித்தவுடன் அது சமுத்திரத்தில் கப்பல்கள்

செல்வது போன்ற தோற்றத்தை சுமதியின் மனதில் தோன்றி அழுத்தத்தை ஏற்படுத்தியது.

சுமதி இப்போது எழுந்து நின்றாள்.

**மாலதி** : என்ன சுமதி ஒன்றும் பேசாமல் எழுந்து நிற்கிற.

**சுமதி** : வா போகலாம். அப்பா, அம்மா தேடுவாங்க. நான் போறேன். (இரண்டு பேரும் ஓடினார்கள்.)
அன்று இரவு சுமதிக்கு தூக்கமே வரவில்லை. காகித கப்பல் தண்ணீரில் மிதந்த காட்சியே தெரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக இமைகள் மூட தூங்க ஆரம்பித்தாள்.

காலையில் எழுந்தவுடன் அந்த கப்பல்களை போய் பார்க்க வேண்டும் என்று மனதில் தோன்றியது. உடனே மழை தண்ணீர் தேங்கிய அந்த இடத்துக்கு சுமதி ஓடினாள். போய் பார்த்த போது மாலதி கப்பல் நனைந்து நசுங்கி போய் இருந்தது. சுமதியின் கப்பல் நனையாமல் நன்றாக இருந்தது. உள்ளே இறங்கி கப்பலை பார்த்தாள். அதற்குள் கட்டெறும்புகளும் காட்டில் உள்ள சிறு, சிறு பூச்சிகளும் தங்கியிருந்தன. தண்ணீர் கொஞ்சம் வற்றியிருந்தது. மீண்டும் கறையில் ஏறி வீட்டுக்கு வந்தாள். ஒரே சிந்தையுடன் தன் கப்பல் மட்டும் சேதம் இல்லாமல் மிதப்பதை நினைத்துப் பார்த்தாள். இப்போது அவளுக்கு புரிந்தது. தன்னுடைய கப்பல் லேமினேசன் பேப்பரில் செய்தபடியினால் தான் சேதம் அடையவில்லை. அதனால்தான் சாகப்போன கட்றெும்புகளும் காட்டு பூச்சிகளும் காப்பாற்றபட்டது என்று அறிந்து கொண்டாள்.

அன்று திங்கட்கிழமையாதலால் ஸ்கூலுக்கு புறப்பட்டாள். மாலதியை சந்தித்தாள். வகுப்பில் சந்தோஷமாக காணப்பட்டாள். மாலை வீடு திரும்பினாள். ஸ்கூல் பேக்கை ஒரு ஓரமாக வைத்துவிட்டு அம்மாவிடம் போனாள்.

**சுமதி** : அம்மா எங்க வகுப்பில் உள்ள எமி வீட்டில் இன்று யாரோ வர்றாங்களாம். படிக்கிற பிள்ளைகளுக்காக ஜெபம் செய்வாங்

களாம். ஜெபம் பண்ணினா நல்லா படிப்பு வரும்னு சொன்னாம்மா. நானும் போறேம்மா.

**சுமதி அம்மா** : சரி. சீக்கிரம் போயிட்டு வா. வேறு எங்கேயாவது விளையாடபோகாதே நேராக எமி வீட்டுக்கு போயிட்டு ஜெபம் முடிந்தவுடன் வீட்டுக்கு வந்து சேரணும் சரியா.

**சுமதி** : சரிம்மா.

எமி வீட்டில் மகேஷ் ஜெபக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

**மகேஷ்** : சிறு பிள்ளைகளே. நான் உங்களுக்காக வேதாகமத்தில் இருந்து ஒரு கதை சொல்லி தரப் போகிறேன். யாருக்கெல்லாம் கதைப்பிடிக்கும்.

**சிறுபிள்ளைகள்** : எல்லோருக்கும் கதைபிடிக்கும் சொல்லித் தாங்கண்ணே.

**மகேஷ்** : யாரெல்லாம் வேதாகமம் வைத்திருக்கீங்க? எங்கே கையில் எடுத்துக்காட்டுங்கள் பார்க்கலாம்.

நான்கு பிள்ளைகள் வேதாகமம் வைத்திருந்தார்கள். எமியிடம் இரண்டு பைபிள் இருந்தது. சுமதியிடம் ஒன்றை கொடுத்தாள். மகேஷ் தொடர்ந்து பேசினார்.

**மகேஷ்** : ஆதியாகமம் 7ம் அதிகாரம் 16ம் வசனம் எடுத்தவர்கள் சத்தமாக வாசியுங்கள் பார்க்கலாம். வேதாகமத்தில் 8ம் பக்கத்தில் அந்தப் பகுதி உள்ளது.

**சுமதி** : தேவன் அவனுக்குக் கட்டளையிட்டபடியே, ஆணும் பெண்ணுமாக சகலவித மாம்சஜந்துக்களும் உள்ளே பிரவேசித்தன; அப்பொழுது கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்.

**மகேஷ்** : பிள்ளைகளே, நோவா என்ற ஒரு தாத்தா இருந்தார். அவர் மிகுந்த நீதிமான். உயிர்களை குறித்து கரிசனை உடையவர்.

ஒருவரும் கெட்டுப் போககூடாது, அழிந்து போககூடாது என்று எப்போதும் ஜெபம் செய்வார். அதனால் கடவுள் அவர்மேல் அதிக பிரியமாயிருந்தார். அதனால்தான் மனிதர்களையும் மற்ற உயிர் களையும் காப்பாற்ற நோவாவை கடவுள் தெரிந்து கொண்டார். மகேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுமதி ஒரு கேள்வி கேட்டாள்.

**சுமதி** : அண்ணே, அது வீடாண்ணே. கதவை பூட்டினார்னு சொல்லீறங்க.

**மகேஷ்** : இல்லை, அது ஒரு பேழை. பேழை என்றால் கப்பல் என்று சொல்லலாம். அது தண்ணீர் மேல் மிதக்கும்படியாக தயார் செய்யப்பட்டது. இன்னொரு வசனம் எடுத்தவர்கள் வாசிக்கலாம். ஆதியாகம் 6:14

**எமி**: "நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்த பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறமுமாகக் கீல் பூசு".

**சுமதி** : கீல்னா அது என்ன அண்ணே?

**மகேஷ்** : ஒரு வகை பிசின். ஒட்டிக்கொள்ளும் தன்மையுடையது. இடைவெளிகளை அடைத்து தண்ணீர் உள்ளே கசிந்து வராமல் தடுக்கும் தன்மை உடையது.

**சுமதி** : கடவுள். உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு என்று தானே சொல்கிறார். மற்றவர்களெல்லாம் கடவுளுக்கு பிடிக்கா தாண்ணே.

**மகேஷ்** : ஆதி 6:12ஐ வாசியுங்கள்.

**எமி** : "தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ, அது சீர்கெட்ட தாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்".

**சுமதி :** அது என்ன வழிண்ணே. அதை எப்படி கெடுத்தாங் கண்ணே?

**மகேஷ் :** நீதிமொழிகள் 15:9-ஐ வாசியுங்கள் உங்களுக்குப் புரியும்.

**எமி :** "துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப் பானது".

**மகேஷ் :** ஆம் ஜனங்கள் துன்மார்க்கமாய் கடவுளுக்கு பிடிக்காத பாதையில் நடந்தார்கள். அதனால் நோவாவையும் அவனுடைய குடும்பத்தையும் கடவுள் காப்பாற்ற விரும்பினார். அதனால்தான் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு என்றார். இப்போதும் கடவுள் நம் ஒவ்வொருவரையும் பார்த்து உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; இந்த பூமி முழுவதும் ஜனங்கள் தங்களை கெடுத்துக் கொண்டிருக் கிறார்கள். நான் அழிக்க போகிறேன் என்கிறார். இந்த உலகம் என்கிற சமுத்திரத்தில் பேழை என்கிற இயேசு கிறிஸ்துவை கடவுள் நமக்காக அனுப்பியிருக்கிறார். அதற்குள் பிரவேசிக்கிறயாவரும் பாதுகாக்கபடு வார்கள். யோவான் 10:9-ஐ எடுத்து வாசியுங்கள் பார்க்கலாம்.

**சுமதி :** "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித் தால், அவன் இரட்சிக்கப்படுவான்".

**மகேஷ் :** ஆம் பிரியமான பிள்ளைகளே, இயேசு கிறிஸ்துவே நித்திய ஜீவனுக்கு போகும் வழி. அவருடன், அதாவது இயேசு கிறிஸ்து என்னும் பேழைக்குள் மறைந்து கொண்டால் நாமும் உலகம் என்ற சமுத்திரத்தில் பேழையாகிய இயேசுவில் நுழைந்து மிதந்து மோட்சம் போய் சேரலாம். சரி நான் ஜெபிக்க போகிறேன். யாருக்கெல்லாம் சமுத்திரத்தில் மிதக்கும் பேழைக்குள் இடம்பிடிக்க விருப்பம். எல்லாரும் முழங்கால் படியிடுங்கள்.

**பிள்ளைகள் :** நாங்கள் எல்லோரும் கிறிஸ்துவுக்குள் வர விரும்புகிறோம்.

**மகேஷ்** : உங்கள் வாழ்க்கையிலே உலகம் என்கிற தண்ணீர் உள்ளே போகாதபடி உள்ளும்புறமும் கீல் என்கிற சிலுவையில் இயேசு சிந்தின ரத்தத்தால் உங்கள் பேழையாகிய கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கையை பாதுகாக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா?

**பிள்ளைகள்** : ஆம் நாங்கள் எல்லோரும் அதை விரும்பு கிறோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் எங்கள் வாழ்க்கையை பூச ஒப்புக்கொடுக்கிறோம். எல்லோரும் கண்களை மூடி ஜெபம் செய்ய ஆயத்தமானார்கள்.

**மகேஷ்** : அன்பின் ஆண்டவரே, இந்த சிறுவரில் ஒருவரும் கெட்டுப் போவது உமக்குப் பிரியமில்லை என்பதை நாம் அறிவோம். ஆண்டவரே, நோவாவின் நாட்களில், நோவா மற்றும் அவன் குடும்பம் மாத்திரம் அல்ல மிருகங்களையும், ஊரும் பிராணிகள், பறவை களையும் பேழைக்குள் வைத்து அழிக்காமல் காப்பாற்றினீர். எங்களையும் காப்பாற்றும். அப்படியே காப்பாற்றுகிறீர். உமக்கு நன்றி. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவே. ஆமென்.

**பிள்ளைகள்** : ஆமென்.

சுமதி, காகித கப்பல்கள் மூலமாக கடவுள் தன்னோடு பேசினார் என்று தேவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டே தன் கப்பலில் லேமினேசன் பூசப்பட்டது இன்றைக்கு பேழையில் அதாவது கிறிஸ்து என்ற பேழையில் இயேசுவின் இரத்தத்தை பூசினதுக்கு சரியாய் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டே நடந்தாள்.

# 8

# உயிரைக் குடிக்கும் உலகத்தின் இச்சையும், ஜீவனை கொடுக்கும் கிறிஸ்துவின் அன்பும்

பீட்டரும், ஜான்சனும் வகுப்பு நண்பர்கள். அன்று சனிக்கிழமை, ஸ்கூல் அரை நேர விடுமுறையாதலால் மாலையில் இருவரும் சந்தித்தனர்.

**பீட்டர்** : டேய் ஜான்சன், என்னடா, கை நிறைய ரூபாய் வைத்திருக்க. இது உனக்கு எப்படிடா கிடைச்சது?

**ஜான்சன்** : அதெல்லாம் உனக்கு எதுக்கு சொல்லணும். உனக்கு என்ன வேணும் அத மொதல்ல கேளு. அப்புறமா மற்றத பார்க்கலாம்.

பீட்டர் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

**ஜான்சன்** : உனக்குதான் உலகமே தெரியாதே. சரி, அதோ, குமார் வந்துட்டான்.

ஜான்சன் கையை அசைத்துக் கொண்டே குமாரை கூட்டிக் கொண்டு நடந்தான்.

**குமார்** : ஜான்சன், இன்றைக்கு என்ன ஐடியா வெச்சிருக்க. எங்க போகலாம். சொல்லு எங்க வீட்டில சித்தி வீட்டுக்கு போறேன்னு சொல்லிவிட்டேன். அம்மா சரின்னுட்டாங்க.

**ஜான்சன்** : மணி என்ன?

**குமார்** : 5.30, ருக்மணி தியேட்டருக்கு இப்ப புறப்பட்டா சரியாயிருக்கும்டா

**ஜான்சன்** : யாராவது பார்த்து வீட்டில சொல்லிட்டா.... எனக்கு பயமாயிருக்குடா.....

**குமார்** : இதுல என்னடாயிருக்கு சினிமா பாக்காதவங்க யாருதான் இருக்கா. சரி புறப்படு. இன்னும் கொஞ்சம் நேரமானா நீ வர மாட்ட.

ஜான்சனும் குமாரும் சினிமா தியேட்டரை நோக்கி நடந்தார்கள். டிக்கட் எடுக்கும் வரிசையில் இரண்டுபேரும் நின்றார்கள். வரிசை கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்தது.

**ஜான்சன்** : இரண்டு, டிக்கட் சார்.

தியேட்டருக்குள் நுழைந்து அடுத்தடுத்த இருக்கையில் அமர்ந்தனர். சினிமா காட்சியும் ஆரம்பமானது.

**குமார்** : எவ்வளவு பணம்டா மீதியிருக்கு

**ஜான்சன்** : பணம் நிறையயிருக்கு உனக்கு என்ன வேணும் கேளு.

**குமார்** : இடைவேளையில் பார்ப்போம்.

இடைவேளையும் வந்தது. இரண்டுபேரும் கடையில் தேவை யானதையெல்லாம் வாங்கி தின்றார்கள். காசும் காலியானது.

சினிமா காட்சி முடிந்து வெளியே வந்தார்கள்.

**குமார்** : இன்னும் எவ்வளவு இருக்குடா?

**ஜான்சன்** : எல்லாம் சரியா போச்சிடா.

**குமார்** : சரி நான் வற்றேன்டா. அதோ ராஜா வந்துட்டான்.

குமாரும், ராஜாவும் சேர்ந்து ஜான்சனை விட்டு பிரிந்தனர்.

ஜான்சன் தனியாக யோசித்துக்கொண்டே நடந்தான்.

ஜான்சன் வீட்டிற்கு ஒரே பையன். அப்பா ஒரு நோயாளி. படுக்கையிலிருப்பவர். அம்மா வேலை செய்து பணம் கொண்டுவந்தால் தான் வீட்டில் சாப்பாடு.

**(ஜான்சன் வீட்டில்)**

**ஜான்சன் அம்மா** : இங்கபாருங்க. உங்களுக்கு ஆஸ்பத்ரி செலவுக்கு இருநூறு ரூபாய் பர்ஸ்ல வெச்சிருந்தேன். அதை காணோமே.

**ஜான்சன் அப்பா** : ம்.......ம்......

பேசகூட முடியாதவராக கையை விரித்து காட்டி இருதயத்தில் வலி எடுக்கிறது என்று சைகை காட்டினார்.

**ஜான்சன் அம்மா** : அய்யோ, நான் என்ன செய்ய வீட்டில் இருந்த இருநூறு ரூபாயும் காணலியே. ஆஸ்பத்திரிக்கு எப்படி உங்களை கூட்டிட்டு போவேன்.

ஜான்சனின் அம்மா ஓவென்று அழுதாள். அப்பொழுது பீட்டர் ஓடி வந்து;

**பீட்டர்** : அக்கா. இந்தாங்க. நான் சேர்த்து வைத்தது.

பீட்டர் இருநூறு ரூபாய் ஜான்சன் அம்மாவிடம் கொடுத்தான்.

**ஜான்சன் அம்மா** : நன்றி பீட்டர்

(இருநூறு ரூபாயைப் பெற்றவுடன் ஜான்சன் அம்மாவின் கண் களில் கண்ணீர் வடிந்தது).

ஜான்சன் அப்பாவை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். அவர் உயிர் பிழைத்தார். ஆஸ்பத்ரியில் ஜான்சன் நின்று கொண்டிருந்தான்.

**பீட்டர்** : ஜான்சன்....

**ஜான்சன்** : உன்னை பார்க்ககூட எனக்கு வெட்கமாயிருக்குடா. நான் அப்பா மருந்துக்கு வைத்திருந்த பணத்தை செலவழித்தேன். நீயோ சேமித்து வைத்த பணத்தை கொடுத்து என் அப்பாவின் உயிரை கொடுத்தியே உனக்கு நான் எப்படி நன்றி சொல்லுவது என்று தெரிய வில்லை. அதுமாத்திரமல்ல நான் வீட்டில் திருடியதும், சினிமா பார்த்ததும், கெட்டவனாகிய குமாருடன் சேர்ந்ததும் பாவம்டா. நான் பாவம் செய்துட்டேன்டா. நீ பணம் கொடுக்கலேன்னா அப்பா உயிரே போயிருக்கும்டா. அப்பாவின் உயிரை நானே எடுத்தேன் என்று என் மனசாட்சியும் என்னை கொன்றிருக்கும்.

(ஜான்சன் கதறி அழுதான்.)

**பீட்டர்** : சரி வா, நாம் ஜெபம் பண்ணுவோம். நமக்காக கல்வாரியில் ரத்தம் சிந்திய நம்முடைய ரட்சகராகிய இயேசு கிறிஸ்துவிடம் நமக்கு மன்னிப்பும், இரக்கங்களும் உண்டு.

இரண்டு பேரும் முழங்கால் படியிட்டு சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை நினைவில் கொண்டு வந்து அழுது **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்** என்ற வசனத்தை சொல்லி, ஆண்டவரே என் பாவங்களை மன்னித்து என்னை ஏற்று கொள்ளும் என்று ஜான்சன் அழுதான். இயேசுவே நீர் சிந்தின இரத்தத் தால் என்னைக் கழுவும் என்று சொன்னான்.

ஜான்சனின் அம்மாவும் எட்டிப் பார்த்தாள். அவர்களின் கண்ணீரைப் பார்த்து, அவளும் இயேசுவை நோக்கி பார்த்து நன்றி கண்ணீர் வடித்தாள்.

**ஜான்சன்** : அம்மா நான் இனி இப்படி தவறு செய்ய மாட்டேன் என்று சொன்னான்.

அப்பொழுது ஜான்சனின் அம்மாவின் இருதயத்தில் **அந்த பட்டணத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று என்று ஒரு குரல் ஒலித்தது.**

# 9

# உண்மையான கிறிஸ்துமஸ்

மணிகுமார் 6ம் வகுப்பு படிக்கும் மாணவன். அவனுக்கு விக்டர் என்ற நண்பன் உண்டு. இருவரும் வகுப்பு நண்பர்கள். விக்டர் குடும்பம் பரம்பரை கிறிஸ்தவ குடும்பம். மணிக்குமார் குடும்பம் இப்போது தான் இயேசுவை ஏற்றுக்கொண்ட குடும்பம்.

அன்று கிறிஸ்துமஸ் தினம். ஆகையால் மணிகுமார் கிறிஸ்துமஸ் ஆராதனைக்கு சென்று விட்டு காலையில் விக்டரை பார்க்க வந்தான்.

விக்டர் எதிரே வந்தான்.

**மணி** : விக்டர். என்னடா கிறிஸ்துமஸ் ஆராதனைக்கு வந்தியா.

**விக்டர்** : .....ம்ம்... ஆமாடா.

**மணி** : நான் உன்னை பார்க்கலியேடா. சரி என் புது டிரஸ் நல்லாயிருக்கா.

**விக்டர்** : ரொம்ப நல்லாருக்குடா. என் டிரஸ் எப்படி. உங்க வீட்டில் என்ன மட்டனா, சிக்கனா?

**மணி** : ஒண்ணுமில்லே

**விக்டர்** : ஏண்டா?

**மணி** : எங்கம்மா பக்கத்துவீட்டு பார்வதியக்கா வீட்ல தான் இன்னைக்கு சமையல்ன்னுட்டாங்க.

**விக்டர் :** என்னடா நிஜமாதான் சொல்றியா?

**மணி :** ஆமாடா, ஏன்னா அம்மா சொன்னாங்க கிறிஸ்துமஸ்னா நமக்கு இல்லடா. மற்றவங்களுக்குதான் நாம கிறிஸ்துமஸ்ஸை கொண்டு போக வேணும்னு சொல்லிட்டாங்க.

**விக்டர் :** டேய் அவங்க. கிறிஸ்துவங்க இல்லடா.

**மணி :** ஆமாடா. அம்மா சொன்னாங்க அவங்களுக்குதான் இயேசு தேவைன்னாங்க.

**விக்டர் :** சரி நாம இரண்டு பேரும் பார்வதியக்கா வீட்டுக்கு போய் பார்ப்போம், வர்றியா?

**மணி :** சரி

இரண்டு பேரும் பார்வதியக்கா வீட்டுக்கு சென்றனர். மணியின் அம்மா, பார்வதியக்கா அவர்களுடைய மகன்கள் ராமு, முத்து அவர்களுடன், ராமு, முத்துவின் அப்பாவும் அங்கேயிருந்தனர். பார்வதியக்காவின் கணவர் வியாதியுள்ளவராக படுக்கையிலிருந்தார். ராமுவும், முத்துவும் கிழிந்த துணிகளை உடுத்தியிருந்தனர். விக்டர் தன் டிரசையும், ராமு, முத்து இருவர் டிரஸ்சையும் மாறி மாறி பார்த்தான்.

முகத்தை திருப்பிக் கொண்டு குலுங்கி குலுங்கி அழுதான்.

**மணிகுமார் அம்மா:** விக்டர் ஏண்டா அழுற

**விக்டர் :** ஒண்ணுமில்லக்கா

**மணி :** விக்டர் வா. உங்க வீட்டுக்கு போவோம்.

இரண்டு பேரும் விக்டர் வீட்டுக்கு சென்றனர். அங்கே கண்ட காட்சி.

விக்டர் அப்பா நல்லா தண்ணியடிச்சுட்டு வீட்டில் ரகளை பண்ணிக் கொண்டிருந்தார். காலை டிபன் இட்லி சாம்பார் சட்னி எல்லாம் கண்ட

இடமெல்லாம் சிதறி கிடந்தது. அம்மாவும், தம்பியும் அழுது கொண்டிருந்தனர்.

விக்டரின் அப்பா எல்லோரையும் அடிக்க அடிக்க பாய்ந்து வந்தார். எல்லோரும் பயந்து போய் உட்கார்ந்திருந்தனர்.

**விக்டர் :** அம்மா, அழாதீங்கம்மா. தம்பி அழாதடா

விக்டர் அம்மாவின் கண்ணீரையும் தம்பி கண்களிலிருந்து வடிந்து கொண்டிருந்த கண்ணீரையும் துடைத்துவிட்டான்.

**மணிகுமார் :** அழாதீங்கக்கா, வாங்க எங்க வீட்டுக்கு போவோம்.

விக்டர், அப்பாவை எட்டி பார்த்தான். அவர் போதையில் சத்தம் போட்டு கத்தி, கத்தி படுத்துவிட்டார்.

மணிகுமார், விக்டர், விக்டர் அம்மா, விக்டர் தம்பி நான்கு பேருமாக பார்வதியக்கா வீட்டுக்கு வந்தார்கள்.

**விக்டர் அம்மா :** மணிகுமார் உங்கவீட்டுக்கு அழைத்து போறேன்னு சொன்னியே ஆனா இங்க வந்திருக்கோமே?

**மணி :** ஆமாக்கா, இன்றைக்கு முழுவதும் இதுதான் எங்க வீடு. இங்கதான் நாம எல்லோரும் கிறிஸ்துமஸ் கொண்டாட போறோம்.

மணிகுமார், அம்மா வாங்கி வைத்திருந்த புது டிரஸ்களை ராமுவுக்கும், முத்துவுக்கும் கொடுத்தான்.

மணிகுமாரின் அம்மா பார்வதியக்காவுக்கு படுக்கையிலிருந்த பார்வதியக்கா கணவருக்கும் புது டிரஸ்களை கொடுத்தாள்.

***அப்பொழுது மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. அப் 8:8 என்ற குரல் கேட்டது.***

எல்லோருடைய கண்களிலும் ஆனந்த கண்ணீர் வடிந்தது. எல்லாரும் முழங்கால் படியிட்டார்கள்.

பார்வதியக்காவும், கணவரும், ராமுவும், முத்துவும், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அறிக்கையிட்டு ஜெபித்தார்கள்.

இதைப்பார்த்து விக்டர், விக்டர் அம்மா, தம்பியும் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து பழைய வாழ்க்கையை விட்டு விலகி உண்மையான கிறிஸ்தவர்களானார்கள்.

அன்றைக்கு கிறிஸ்துமஸ் பண்டிகையை ஏழை பார்வதியக்கா வீட்டில் கொண்டாடினார்கள்.

மத் 25:34-40வரை வேதம் சொல்கிறது

“அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து; வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமா-யிருந்தேன், என் தாகத்தைத்தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னை சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.

அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ள-வராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்?

எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்?

எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும், காவலிருக்கிற வராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.

அதற்கு ராஜா பிரதியுத்தரமாக : மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

(**குறிப்பு** : பிரியமானவர்களே, கிறிஸ்துமஸ் தினத்தில் குடித்து, வெறித்து, உணவு பொருட்களை வீணாக்கி குப்பை தொட்டியில் போடுகிறோமே, சமைத்த உணவுகளை சாப்பிடவிடாமல் குடும்பத்தில் சண்டை போட்டு குடும்பத்தில் உள்ளவர்களை வேதனைப்படுத்து கிறோமே, கிறிஸ்துமஸ் தினத்தில் புத்தாடைகளை உடுத்திக்கொண்டு வஸ்திரமில்லாத ஜனங்கள் மத்தியில் உலாவுகிறோமே, கர்த்தருடைய ஊழியங்களை செய்கிறோமே, வஸ்திரமில்லாத ஜனங்கள் நம்மை என்ன சொல்லுவார்கள்)

சற்றே சிந்தியுங்கள்!

# 10

# சிறுபிள்ளைகளும் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலும்

ஜெசியும், சுந்தரியும் வகுப்பு சினேகிதிகள். இரண்டு பேரும் வகுப்பறையில் பக்கத்தில் சேர்ந்துதான் உட்கார்ந்திருப்பார்கள். அன்று மதியம் ஸ்கூல் மதிய உணவு வேளையில் மதிய சாப்பாட்டுக்காக மரத்தடியில் உட்கார்ந்தார்கள். இரண்டு பேரும் டிபன் கேரியரை திறந்தார்கள்.

**ஜெசி** : நீ என்ன கொண்டு வந்திருக்கிற?

**சுந்தரி** : அம்மா, இன்று சப்பாத்திதான் வைச்சிருக்காங்க.

**ஜெசி** : எங்கிட்ட சாப்பாடு இருக்கு. இதுல கொஞ்சம் உனக்குத் தற்றேன்.

**சுந்தரி** : அப்படீன்னா, எங்கிட்ட கொஞ்சம் சப்பாத்தி வாங்கிக்க

**ஜெசி** : சரி

இரண்டு பேரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். சுந்தரி பேச ஆரம்பித்தாள்.

**சுந்தரி** : ஜெசி, நான் ஸ்கூலுக்கு புறப்பட்டு வர்ற பொழுது, எங்க பக்கத்து வீட்டுல இருக்கிற பார்வதி அக்கா அழுதுகிட்டு இருந்தாங்க. எனக்கு ஸ்கூலுக்கு நேரமானதால வேகமா வந்துட்டேன்.

**ஜெசி** : என்னத்துக்கு அழுறாங்க. அவுங்க வீட்டுக்காரரு அடிச்சிபுட்டாரா?

**சுந்தரி :** அதுதான் ஒண்ணும் தெரியல.

**ஜெசி :** ஸ்கூல் விட்டதும் இரண்டு பேரும் போய் பார்ப்போம். சரியா.

இரண்டு பேரும் சாப்பிட்டு முடிக்கவும் ஸ்கூல் ஆரம்பிக்க மணி ஒலித்தது. மீண்டும் இரண்டு பேரும் படிப்பில் கவனம் செலுத்தினார்கள். சரியாக நான்கு முப்பது மணிக்கு ஸ்கூல் பெல் அடித்தது. பிள்ளைகள் எல்லாம் பேக்குகளுடன் தங்களுடைய பொருள்களையும் எடுத்துக் கொண்டு வெளியேறினார்கள். ஜெசியும், சுந்தரியும் பார்வதி அக்கா வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

**சுந்தரி :** பார்வதியக்கா

**பார்வதி:** என்னப்பா ஸ்கூல் விட்டாச்சா. வீட்டுக்கு போகலையா. நேரா இங்க வந்திருக்கீங்க.

பார்வதி அழுது கண்கள் எல்லாம் வீக்கம் கண்டு இருந்தது. சுந்தரியை பார்த்து மிக அன்பாக பேசினாள்.

**சுந்தரி :** நான் ஸ்கூலுக்கு போறப்ப நீங்க அழுது கிட்டிருந்தீங் கல்ல. அதான் நேராக உங்களை பார்க்க வந்தோம்க்கா.

பார்வதி மீண்டும் அழத்துவங்கினாள். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. ஓவென்று கதறி அழுதாள். ஜெசி, பார்வதியின் கண்களில் வடிந்த கண்ணீரை தன் வலது கையால் துடைத்து விட்டாள்.

**ஜெசி :** ஏங்க்கா அழறீங்க விபரமா சொல்லுங்கக்கா உங்களுக்கு ஆறுதல் சொல்ல ஒருவருமே இல்லியாக்கா தனியாகவே அழுதுகிட்டு இருக்கீங்க.

**பார்வதி:** எனக்கு ஆறுதலுக்குன்னு ஒருவர் கூட இல்லப்பா. என் கணவர் ஒரு குடிகாரர். எனக்கு இரண்டு மகன்கள். என் இரண்டு மகன்களும் என்னை பார்த்துக்குவாங்கன்னு சந்தோஷமாயிருந்தேன். ஆனால் தகப்பனுடைய தவறான பழக்கங்களால் பிள்ளைகளும் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி கெட்டுப்போய் திருடர்களாய் மாறி

ஜெயிலுக்கு போயிட்டாங்க. என் கணவர் என்னைவிட்டு ஓடிப்போ யிட்டாரு. இப்ப எங்க இருக்காருன்னே தெரியல. அதான் என்னால தாங்க முடியாம அழுதுகிட்டு இருக்கேன். காலையில பக்கத்து தெரு கடைக்கு போய் திரும்பி வரும் போது கிறிஸ்டின்காரக்கா இருக்காங் கல்ல அதான் கிரேஸ் அவுங்க வீட்டு வழியாவந்துட்டுருந்தேன். கிரேஸ் அக்கா வீட்டுல டி.வி-யில கிறிஸ்தவ போதகர் ஒருவர் பேசிட்டிருந்தார். நான் நின்று கவனித்து பார்த்து கேட்டு கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் மத்தேயு 2ம் அதிகாரம் 17ம் வசனத்தை எடுத்தவர்கள் வாசிக்கலாம் என்றார். உடனே ஒருவர் சத்தம் போட்டு வாசித்தார். **புலம்பலும், அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது. ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலையடயாதிருக்கிறாள். மத் 2:17** என்று சொல்லி முடித்தார். அவ்வளவுதான் என் இருதயம் சுக்குநூறாய் உடைந்தது. நான் நம்பியிருந்த என் பிள்ளைகள் இல்லாமல் இனி நான் இந்த உலகத்தில் வாழ்ந்து என்ன பிரயோஜனம் என்று அழ ஆரம்பித்தேன்.

**ஜெசி** : கவலைப்படாதீங்கக்கா. நாம் ஜெபம் பண்ணு வோம்க்கா. ஆண்டவர் உங்க கணவனையும் இரண்டு பிள்ளை களையும் திருத்தி கொண்டு வருவார்.

**பார்வதி:** எனக்கு ஜெபம் பண்ண தெரியாதுப்பா

**ஜெசி** : நான் சொல்ல சொல்ல நீங்க சொல்லுங்க அப்புறமா நீங்களே ஜெபம் செய்துருவீங்க.

**பார்வதி:** சரிப்பா

**ஜெசி** : நம்முடைய பாவங்களை நான் பாவம் செய்தேன் என்று ஒத்துக் கொண்டால்தான் அவர் நம்மை மன்னிப்பார். பின்பு தான் நம்முடைய ஜெபத்தை ஆண்டவர் கேட்டு நமக்கு நன்மை செய்வார். நம்முடைய பாவங்களை நாம் ஒத்துக்கொள்ளாமல் ஆண்டவரே எனக்கு அதுவேண்டும், இதை செய்யும் என்று அவருக்கு கட்டளை கொடுக்க முடியாது. அவர் சகலத்தையும் உண்டாக்கினவர். அவரால் செய்யக் கூடாத அதிசயமான காரியம் இந்த உலகத்திலே ஒன்றும் இல்லை என்று வேதபுஸ்தகம் சொல்லுகிறது. ஆண்டவர்

நினைத்தால் உங்கள் கணவரையும் இரண்டு மகன்களையும் திருத்தி உங்கள் வீட்டுக்கு அழைத்து வருவார். அவரால் எல்லாம் கூடும் என்று வேதம் சொல்லுதுக்கா.

**பார்வதி:** அப்படியா, சரி நீ சொல்லுப்பா நான் தொடர்ந்து சொல்லுகிறேன்.

**ஜெசி** : அக்கா, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்" என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் நிச்சயமாகவே அவர் அற்புதத்தை செய்வார். ஆனா நீங்க இயேசு அற்புதங்களை செய்கிறவர் என்பதற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவார். ஆகையால், அப்படி நீங்கள் உங்கள் இருதயத்தில் தீர்மானம் எடுத்தால் மட்டுமே அற்புதம் செய்வார். இயேசு செய்த உதவிக்கு நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதையே அவர் விரும்புவார்.

**பார்வதி:** இயேசு அற்புதம் செய்து என் கணவரையும் பிள்ளைகளையும் கொண்டுவந்தால் நாங்கள் குடும்பமாக அவரையே தெய்வமாக ஏற்றுக் கொள்வோம் என்று தீர்மானம் எடுக்கிறேன். என்றும் நன்றியுள்ளவளாக இருப்பேன் என்று தீர்மானம் எடுக்கிறேன். சரியா....

பார்வதி, சுந்தரி, ஜெசி மூன்று பேரும் முழங்கால் படியிட்டார்கள்.

**ஜெசி** : நாம் மூன்று பேரும் இயேசு சிலுவையிலே அடிக்கப் பட்டு இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறவராகவும் நாம் சிலுவையின் அடியில் முழங்காலில் நிற்கிறவர்களாக நினைவில் கொண்டு வருவோம். நம்முடைய சரீரத்தில் இயேசுவின் இரத்தம் வடிகிறதாகவும் காண்போம் சரியா. (மற்ற இரண்டு பேரும் சரி என்றார்கள்.)

**ஜெசி** : எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நாங்கள் பாவிகள். ஆண்டவரே நாங்கள் அதை ஒத்துக் கொள்கிறோம். ஆனாலும் எங்களுக்காக இரத்தம் சிந்தியிருக்கிறீர். இதை நாங்கள் விசுவாசிக்கிறோம். நீர் எங்களை மன்னித்து நீர் சிந்தின இரத்தத்தால் எங்களை கழுவி சுத்தம் பண்ண நாங்கள் ஒப்புக் கொடுக்கிறோம். இப்பொழுதே நீர் எங்களை மன்னித்து பாவத்திலிருந்து விடுதலை

ஆக்கினதற்காய் நன்றி செலுத்துகிறோம். இப்பொழுதும் பார்வதி அக்காவின் ஜெபத்தை கேட்டு அவர்கள் கணவரையும், இரண்டு மகன் களையும் எங்களைப் போல மன்னித்து இரட்சித்து எல்லா தீய பழக்கங் களிலுமிருந்து விலக்கி குடும்பத்தோடு ஐக்கியமாக்கும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

இதே மாதிரி பார்வதியும், சுந்தரியும் ஜெபித்து இரட்சிக்கப்பட்டார்கள்.

சில நாட்கள் கழித்து :

**பார்வதி வீட்டில்:** ஜெசி, சுந்தரி, பார்வதி, பார்வதியின் கணவர், பார்வதியின் இரண்டு மகன்கள் ஆக ஆறு பேரும் கூடி ஜெபித்து கொண்டிருந்தார்கள். அப்போது ஜெசி வேதத்திலிருந்து ஒரு பகுதியை சத்தமாக வாசித்தாள். **“தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர் களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.**

**எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது”. (II கொரி 1:4,5)** சுந்தரியின் அம்மா கதவு துவாரத்தின் வழியாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுந்தரியின் அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. கேவி, கேவி அழுது அவர்களும் இரட்சிக்கப்பட்டார்கள்.

நீங்க எப்படி?

# 11

## நீயும் தாவீதைப் போலாகலாம்

இரவு 8 மணியிருக்கும். அது ஒரு சிறிய கிராமம். பெயர் மருதூர். ஊருக்கு வடக்கு புறமாக மெயின்ரோடு. அந்த மெயின் ரோடு அடுத்த கிராமமாகிய காத்தூர் வழியாக கடந்து செல்கிறது.

மணியும், ஜேக்கப்பும் மருதூருக்கும், காத்தூருக்கும் இடையில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். இரண்டு பேரும் ஆளுக்கொரு முழு வேதாகமத்தை கையில் வைத்திருந்தனர். இருவரும் 6ம் வகுப்பு நண்பர்கள்.

**ஜேக்கப்** : மணி, உனக்கு பயமாக இருக்கா?

**மணி** : ஆமாடா, நீ என்னமோ ஜெபம் பண்ண போறோம்னு சொன்னியே எங்க போகப் போறோம்.

**ஜேக்கப்** : காத்தூர்ல ஒரு அண்ணன் இருக்காங்கடா. நல்லா ஜெபத்துல நடத்துவாங்க. நிறையபேர் அங்க வருவாங்கடா.

(மணி ஒரு இயேசுவை அறியாத குடும்பத்திலுள்ள பையன் அப்பா கிடையாது. அம்மா உண்டு. மிகவும் ஏழை குடும்பம். ஜேக்கப் மூலமாக இயேசுவை தெரிந்துகொண்டான். அவனையும் அவன் அம்மாவையும், குடும்பத்திலுள்ள சொந்தக்காரங்க எல்லாரும் ஒதுக்கினார்கள். அது அவனுக்கு நினைக்கும்போதெல்லாம் மிகுந்த மனவேதனையை கொடுக்கும். தனது உதவியற்ற நிலைமையை நினைத்து, வறண்ட நிலத்தில் அலைந்து திரிகிறதை போல உணருவான். எப்போதும் மகிழ்ச்சியற்ற நிலையில் இருப்பான்.)

**மணி** : அவங்க எல்லாரும் பணக்காரங்களா, ஜேக்கப்?

**ஜேக்கப்** : அவங்கெல்லாம் பணக்காரங்க, ஏழைன்னு ஒண்ணும் கிடையாது. எல்லாரும் அன்பாயிருப்பாங்க. எல்லாரும் ஒரே சிந்தனையில் இயேசுவையே பார்த்துகிட்டிருப்பாங்க.

**மணி** : அதெப்படி இயேசுவை பார்க்க முடியும். முன்பெல்லாம் அம்மா பக்கத்துல இருக்கிற, எங்க பூர்வீக குடும்ப கோயிலுக்கு கூட்டிட்டு போவாங்க. நான் சாமியைப் பார்ப்பேன். ஆனா நீங்க இயேசுவை பார்த்தேன்னு சொல்றீங்க. அது எப்படி இங்க இயேசு சிலையே இல்லியே.

**ஜேக்கப்** : இயேசு சிலையா எல்லாம் இருக்கமாட்டாரு. அவரு மரணத்தை ஜெயமாய் விழுங்கினார்ன்னு இந்த வேத புத்தகம் சொல்லுது. அவர் நம்மோடு கூடதான் வந்து கொண்டிருக்காரு. ஆனா நமக்குதான் தெரியல.

(இப்படி பேசிக்கொண்டே ஜெபம் பண்ணவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஜெபகூட்டம் ஆரம்பமாகி பாடல்கள் பாடிக் கொண்டிருந்தனர். ஜோசுவா ஜெபக்கூட்டத்தை பொறுப் பெடுத்து நடத்திக் கொண்டிருந்தான்.)

**ஜோசுவா** : ஜேக்கப் எப்படியிருக்கிற. இந்த பையன் புதுசாயிருக்கு பையன் பெயர் என்ன?

**ஜேக்கப்** : ஜோசுவாண்ணே, இவன் பேர் மணி. எங்ககூட படிக்கிறான். அப்பா இல்ல. அம்மாயிருக்காங்க. ரொம்ப நல்லவன்.

**ஜோசுவா** : மணி நல்லா படிக்கிறாயா?

**மணி** : ஆமாண்ணே....

(ஜோசுவா ஜெபத்தை ஆரம்பித்து நடத்தி முடித்து செய்தி வேளைக் காக ஜெபித்து ஆயத்தப்படுத்தினான்.)

**ஜோசுவா** : 1 சாமுவேல் 17:36 எடுத்தவர்கள் வாசிக்கலாம்.

**ஒருவன் : "அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான்".**

**ஜோசுவா** : ஆம், பிரியமான பிள்ளைகளே, தாவீது சிறு பையன். அவன் வீட்டிலே கடைசி பையன். அவனை வீட்டுல யாருமே தேடமாட்டாங்க. அதனால அவனை ஆடு மேய்க்க அனுப்பினாங்க.

ஆனா தாவீதின் மற்ற சகோதரர்களுக்கு குடும்பத்துல நல்ல மதிப்பு இருந்தது. ஏன்னா, அவங்க எல்லாரும் ராணுவத்தில் வேலை செஞ்சாங்க. ஆனால் தாவீதுக்கு படிப்பு இல்லை. அதனால ஆடுமேய்த்தான்.

**ஆனால் கர்த்தர் அவனோடு இருந்தார்.** அவன் எப்பொழுதும் தேவனை தேடிக் கொண்டேயிருந்தான். கர்த்தர் மேல் முழு விசுவாசத் தோடு இருந்தான். அதனால்தான் அவன் தெளிவாய் சொல்கிறான். விருத்தசேதனமில்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்று, பிரியமான பிள்ளைகளே விருத்தசேதனமில்லாதவன் என்றால் இரட்சிக்கப்படாதவன் என்று பொருள்.

இரட்சிக்கப்படாத எந்த நபரிடமிருந்து நமக்கு பிரச்சனை வந்தாலும் நாமும் இதே வார்த்தையை அறிக்கை செய்ய வேண்டும். சரியா? 45ம் வசனத்தை எடுத்தவர்கள் வாசிக்கலாம்.

**ஒருவன் : "அதற்குத் தாவீது: பெலிஸ்தனை நோக்கி நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்".**

**ஜோசுவா** : ஆம் பிள்ளைகளே, முதலாவது இரட்சிக்கப்படாத பெலிஸ்தன் என்று சொன்னான். இப்பொழுது பட்டயம், ஈட்டி, கேடகம் என்று பெரிய ஆயுத குவியலோடு நீ என்னிடத்தில் வருகிறாய் என்றான். தாவீது கிறிஸ்தவ வாழ்விற்கு இந்த ஆயுதங்கள் ஒன்றுக்கும் உதவாது

என்று விசுவாசித்தான். ஆகையால்தான் இந்த ஆயுதங்களை பார்த்து அவன் ஏளனம் பண்ணினான். இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள், கர்த்தரைவிட்டு விட்டு இப்படிப்பட்ட ஆயுதங்கள் நம்மை காப்பாற்றும் என்று நம்புகிறார்கள். பிரியமானபிள்ளைகளே தாவீது அதைப்பார்த்து சிரித்தான்.

தாவீது சொன்னான் நீ நிந்தித்த என்று, **எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. எங்கள் பக்கத்து வீட்டில் ஒரு சகோதரி இருந்தார்கள். அவர்கள் இயேசுவை அறியாதவர்கள். அவர்களிடத்தில் சுவிசேஷத்தை சொன்னபோது அவர்கள் சொன்னகாரியம் எனக்கு மிகுந்த வேதனையை கொடுத்தது.**

**என்ன இவங்க ஏசு, ஏசு என்று சொல்றாங்க. அந்தசாமிக்கு எலும்புமில்ல. தோலுமில்ல. இதெல்லாம் எங்களுக்கு வேண்டாம் என்றார்கள்.**

பிரியமான பிள்ளைகளே நம்முடைய தேவன் மரணத்தை ஜெயமாக விழுங்கினவர். விழுங்கினவர் என்றால் நமக்கு முன்னால் ஒரு சிறு பழம் வைக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நாம் அதை எடுத்து விழுங்கிவிட்டால் அந்த இடத்தில் அதை பார்க்க முடியுமா? முடியாதே. அதே போலதான் நம்முடைய இயேசு கிறிஸ்து மரணத்தை விழுங்கி விட்டார்.

இனி மரணத்தை தேடினாலும் அது இல்லை. பாத்தீங்களா, இயேசுவே மரணத்தை சாப்பிட்டு விழுங்கிவிட்டார். சரியா?

எனக்கன்பான சிறுபிள்ளைகளே நீங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?

**மற்றவர்கள்** : ஆமாம்... ஆமாம்... எங்களுக்கு இயேசுதான் வேண்டும்.

மணி கவனமாய் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் தாவீதைக் குறித்த செய்தியின் பொருள்கள் ஒரு திரைப்படம் போல ஓடிக் கொண்டிருந்தது. தாவீது ஒரு சிறு பையன். அதிலும் படிக்காதவன். ஆடு மேய்த்தவன். குடும்பத்தில் கடைசி பையன். மதிப்பில்லாதவன் எல்லாராலும் இவனுக்கு ஒன்றும் தெரியாது என்று முத்திரை

குத்தப்பட்டு ஒதுக்கி தள்ளப்பட்டவன். ஏன் கடவுள் மட்டும் இவனை பிரியமானவனாக எண்ணினார். மணி இப்படி சிந்தித்துக் கொண்டு இருக்கும் பொழுது:

**ஜோஸ்வா** : 1 கொரிந்தியர் 1:27,28 எடுத்தவங்க வாசிங்க

**ஒருவன்** : **"ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்: பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்.**

**உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவை களையும், தேவன் தெரிந்து கொண்டார்".**

**ஜோஸ்வா** : ஆம்பிள்ளைகளே, தாவீதுக்கு ஒன்றும் முடியாது என்று தெரியும். ஆனால் 1 சாமு 17:45 சொல்லுகிறது: "நானோ... கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" என்றான். என்ன அருமையான விசுவாசம் பாருங்கள். அவன் இருதயத்தில் கர்த்தரின் நாமத்தையே அவன் பார்த்தான். அடுத்தபடியாக பாருங்கள். ஈட்டியும், பட்டயமும் அரிவாள்களும், மண்வெட்டிகளும், தடியும், கம்பும் கர்த்தருக்கு முன்பாக முறிந்துவிழும் என்று வெளியரங்கமாக அறிக்கை செய்தான் பாருங்கள்.

கர்த்தர் அவன் விசுவாசத்தையும் தேவன் மேல் அவனுக்கிருந்த அன்பையும் கவனித்தார். சாமுவேல் தீர்க்கதரிசி மூலமாக தாவீதை தனக்காக தெரிந்து கொண்டார். பிள்ளைகளே தேவன் மேல் உங்களுக்கு அன்பு உண்டா?

**மற்றவர்கள்** : ஆமாம்.... ஆமாம்....

**ஜோஸ்வா** : 1 சாமு 16:6-10 வரை வாசித்து பாருங்கள். ஈசாயின் குமாரர்கள் எலியாப், அமினதாப் சம்மா இப்படி ஏழு பேரை கடந்து போகப் பண்ணினார். இவர்களுக்கு தோற்றத்தில் உயரம்.... பலம், கல்வி, யுத்தத்தில் பயிற்சி எல்லாம் இருந்தது. ஆனால் தேவன்

இவர்களையும் புறக்கணித்தார். கர்த்தர் சொன்னார். “நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம். நான் இவனைப் புறக்கணித்தேன்;... மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்”.

எனக்கன்பான சிறுபிள்ளைகளே தேவன் உங்களை தாவீதைப் போல நேசிக்கிறார். நீ இப்போது உன்னை சரீர வளர்ச்சி இல்லை, பலம் இல்லை, நான் ஒரு அறிவீனன் படிப்பறிவில்லாதவன், உலகப் பிரகாரமான சண்டை பிரச்சனைகளைக் கண்டு பயப்படுகிறவன் என்று ஒத்துக்கொண்டால், தாவீதைப் போல உன்னை தெரிந்து கொள்ள விரும்புகிறார். உங்களுக்கு விருப்பம் உண்டா.

**மற்றவர்கள்** : ஆமாம் எங்களுக்கு விருப்பம் உண்டு.

**ஜோஸ்வா** : சரி, இப்ப பாருங்க, சாமுவேல்: உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான்.

சொன்ன பதில்.

இளையவன் ஒருவன் இருக்கிறான். அவன் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறான்.

ஆம் பிள்ளைகளே தாவீதை ஆடு மேய்க்க ஈசாய் தெரிந்து கொண்டான். கர்த்தர் தாவீதை ராஜாவாக தெரிந்து கொண்டார். பாருங்கள். மனிதனுடைய பார்வைக்கும் தேவனுடைய பார்வைக்கும் எவ்வளவு வித்தியாசம் என்று. நீங்க ஆடுமேய்க்க வேண்டுமா? ராஜா வாக வேண்டுமா?

**மற்றவர்கள்** : தாவீது ராஜாவை போலாக வேண்டும்....

**ஜோஸ்வா** : 1 சாமு 16:12 பிற்பகுதியை மட்டும் வாசிங்க.

**ஒருவன்** : அப்பொழுது கர்த்தர் இவன்தான் நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார்.

**ஜோஸ்வா :** நாம எல்லாரும் ஜெபிக்க போகிறோம். எல்லாரும் எழும்பி நில்லுங்கள். மணியும் எழும்பி நின்றான். மணியின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய் ஓடிக்கொண்டிருந்தது. அவன் இருதயம் கேட்கப்பட்ட செய்தியினால் தொடப்பட்டு, சத்தம் போட்டு கத்தினான். இனி நான் ஆதரவற்றவன் இல்ல **என்னோடு தேவன் இருக்கிறார். தாவீதோடு இருந்தவர் என்னோடு இருக்கிறார் என்றான்.**

**மற்றவர்கள் :** உரத்த சத்தமாய் கைதட்டி தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

# 12

## மன்னிப்பினாலே உண்டான ஆத்தும அறுவடை

எமி ஐந்தாம் வகுப்பு படிக்கும் சிறு பெண் அப்பா இல்லை. அம்மா உண்டு. உடன் பிறந்தவர்கள் ஒருவரும் இல்லை.

அம்மா கூலி வேலை செய்துதான் வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது.

எமியின் அப்பாவை மோசமான வியாதி ஒன்று தாக்கி இறந்து போனார். எவ்வளவோ பணம் பொருள்களையெல்லாம் காலி செய்தும், ஆஸ்பத்திரியில் பார்த்தும் பிரயோஜனமில்லாமல் மரித்துப்போனார். அதுவரை சுகபோகமாய் வாழ்ந்து வந்த அந்தக் குடும்பம் வறுமையை எதிர்கொள்ள வேண்டியதாகிவிட்டது. அப்பாவின் வைத்திய செலவுக்காக வாங்கிய கடனுக்காக அவர்களுக்கிருந்த ஒரு சின்ன வீட்டையும் விற்க வேண்டியதாகிவிட்டது. இப்பொழுது வாடகை வீட்டில்தான் குடியிருந்தார்கள்.

எமியின் அப்பா இருக்கும்போது, இந்துக் குடும்பமாக இருந்த அவர்கள் இப்போது இயேசுவுக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து கிறிஸ்தவர்களாக தங்கள் பெயர்களையும் மாற்றி, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு நல்ல சபையில் ஐக்கியமாகிக் கொண்டார்கள்.

எமியின் அம்மாவும் ஸ்டெல்லா என்று பெயர் மாற்றிக் கொண்டாள். எமியின் குடும்பம் இருந்த வீட்டின் உரிமையாளர் ஒரு கிறிஸ்தவர். ஒரு நல்ல தேவ மனிதர். இவருக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உண்டு. வாரம் ஒருமுறை வீட்டில் கூடி ஜெபிக்கும் குடும்பம். அந்த

வீட்டின் உரிமையாளர் பெயர் ஜான். மனைவியின் பெயர் கிருபா. ஒரு பிள்ளையின் பெயர் பெல்சி. அடுத்த பிள்ளையின் பெயர் மெர்சி.

இவர்கள்தான் எமியின் குடும்பத்தை கிறிஸ்துவுக்குள் நடத்தி, அந்த இரண்டு ஆத்துமாக்களையும் கிறிஸ்துவுக்குள் ஆதாயபடுத்திக் கொண்டார்கள்.

ஸ்டெல்லா கொண்டுவரும் சம்பள பற்றாக்குறைவினால் எமியும் ஸ்கூல் முடிந்தவுடன் பக்கத்தில் இருந்த இயேசுவை அறியாத ஒரு பணக்கார வீட்டின் சிறிய தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது, வீட்டை சுத்தம் செய்வது, இப்படி சின்ன சின்ன வேலை களை தினமும் ஒரு மணி நேரம் செய்துவந்தாள். அந்த வீட்டில் கொடுக்கும் மாதம் ரூ. 50ல் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று ரூ.5 எடுத்து வைத்துவிடுவாள். ஸ்டெல்லா மகளுக்கு கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கையைப் பற்றி நன்றாக கற்றுக் கொடுத்திருந்தாள். எமியின் இருதயத்தில் இயேசுவுக்காக ஏதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் தாகமாய் இருந்து கொண்டேயிருக்கும்.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவியாக இருந்தாலும் தினமும் காலையில் இரண்டு அதிகாரமும் மாலையில் இரண்டு அதிகாரமும் வேதத்தில் இருந்து படித்து மனப்பாடம் செய்து வந்தாள்.

இப்படி வேதாகமம் முழுவதையும் படித்து முடித்துவிட்டாள். தான் படித்து அறிந்து கொண்ட சத்தியத்தை பிறருக்குச் சொல்லவேண்டும் என்ற எண்ணம் அவள் இருதயத்தில் அக்கினியாய்ப் பற்றி எரிய ஆரம்பித்தது. இயேசு செய்த ஒவ்வொரு அற்புதத்தையும் குறித்து தியானிக்க ஆரம்பித்தாள்.

அன்று மதியம் பனிரெண்டு மணியிருக்கும். அரசு விடுமுறை நாள். ஸ்கூல் லீவு. அம்மா வேலைக்குச் சென்றுவிட்டாள். எமி தனியாக இருந்தாள்.

முழங்கால் படியிட்டாள்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதையும், அவர் சரீரத்திலிருந்து இரத்தம் வடிகிறதையும் அது அவள் சரீரம் முழு வதையும் நனைக்கிறதையும் தன் இருதயத்தைக் கழுவி சுத்தம் பண்ணு கிறதையும் உணர்ந்தாள்.

எமி ஜெபிக்க ஆரம்பித்தாள்.

**எமி** : இயேசப்பா, நீங்க எனக்காக மரித்தீங்கப்பா. நான் உங்களுக்காக ஒன்றும் செய்யவில்லையே. இது எனக்கு மனவேதனை யாயிருக்குப்பா. ஆனா நான் உங்களுக்காக என்ன செய்ய வேண்டும். எப்படி உங்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று ஒண்ணுமே புரியலப்பா. நான் சின்ன பொண்ணுப்பா. என்ன மன்னிச்சிடுங்கப்பா.

இதற்குமேல் ஒண்ணுமே எமிக்கு ஜெபிக்கமுடியல. இரண்டு கண் களிலுமிருந்து கண்ணீர் ஆறாய் ஓடியது.

ஏங்கி, ஏங்கி அழுதாள்.

அப்படியே படுத்து உறங்கி விட்டாள். அதே நேரத்தில்

**எமி வேலை செய்யும் பணக்கார வீட்டில்....**

பணக்காரர் பெயர் காளிமுத்து. அவர் மனைவி பெயர் புண்ணியவதி.

**காளிமுத்து** : ஏய் புண்ணியவதி, இங்கவாடி.

காளிமுத்து காட்டுகத்தல் கத்திக் கொண்டிருந்தான். புண்ணியவதி பயந்து கொண்டு ஓடி வந்தாள்.

**புண்ணியவதி** : என்னாங்க, ஏன் இப்படி கோபமா கத்துறீங்க கத்தாம மெதுவா பேசினாலே போதும். எனக்குப் புரியும். மெதுவா பேசுங்க.

**காளிமுத்து** : இந்த செல்ப்ல நான் கழற்றி வைத்திருந்த என்னோட கை ஜெயின் எங்க?

**புண்ணியவதி** : நல்லா யோசிச்சிபாருங்க. இங்கதான் வச்சீங்களான்னு யோசிச்சிபாருங்க.

**காளிமுத்து** : எனக்கு புத்தி சொல்றியாடி. செருப்ப கழற்றி அடிச்சி புடுவேன். கழற்றி வைத்தவன் நான். அதான் கண்டகண்ட கழுதை களையெல்லாம் வீட்டுக்குள்ள விடாதண்ணேன். எத்தனை தடவை உனக்கு சொல்லியிருக்கேன். நான் சொல்றத நீ கேக்க மாட்டேங்கற.

**புண்ணியவதி** : நான் யார வீட்டுக்குள்ள வர விடுறேன். தேவயில்லாம எதை எதையோ பேசாதீங்க. நிதானமா தேடுங்க.

**காளிமுத்து** : தேடுறது என்ன, எல்லாம் சேர வேண்டிய இடத்துல போய் சேர்ந்திருக்கும்.

**புண்ணியவதி** : நீங்க என்ன சொல்றீங்க?

**காளிமுத்து** : அதான், அந்த வேதக்காரத் திருட்டு நாயி எமிதான். வேறயாரு நம்ம வீட்டுக்குள்ள வந்து திருட முடியும். நீதான் நல்லா இளக்காரங்கொடுத்துட்ட. ரெண்டு பவுன் கை செயின் இப்ப காணல.

**புண்ணியவதி** : இங்க பாருங்க. அந்த சின்ன பொண்ணப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும். அது கடவுளுக்கு பயந்த புள்ள. அவ அம்மாவப் பத்தியும் எனக்கு நல்லாத் தெரியும். வீணா அந்தப்புள்ள மேல பழி போடாதங்க. கிறிஸ்தவங்க அப்படியெல்லாம் செய்யமாட்டாங்க.

**காளிமுத்து** : ஏய் நீ அவளுக்கு வக்காலத்து வாங்கறியா. கிறிஸ்தவ நாய்ங்க செய்யற அட்டூழியத்தைப் பற்றி பத்திரிக்கையிலும், டிவியிலும் தினசரி வர்ற செய்திய நீ பார்க்கலன்னு நெனைக்கிறேன். போலீஸ்ல கம்ளெயிண்ட் பண்ணினாதான் உண்மை தெரியும்.

**புண்ணியவதி** : வேண்டாங்க, நல்லா தேடுவோம். பிறகு பார்க்கலாம்.

**காளிமுத்து** : சரி தேடிப் பாரு பார்ப்போம்.

(எமிவீட்டில்) ஸ்டெல்லா வேலைக்கு போய்விட்டு வந்து சாத்தியிருந்த கதவைத்திறந்தாள்.

**ஸ்டெல்லா :** எமி எழுந்திருபுள்ள. மணி நாலு ஆச்சி. செடி களுக்கு தண்ணீர் ஊத்தப் போலயா.

எமி அவசரமாக எழுந்து முகம் கழுவி புறப்பட ஆரம்பித்தாள்.

**ஸ்டெல்லா :** சாப்பிட்டியா?

**எமி :** இல்லம்மா

**ஸ்டெல்லா :** பழய சோறு இருக்கில்ல. பின்ன என்ன சாப்பிட்டு போலாம்ல.

**எமி:** இல்லம்மா, போயிட்டு இப்ப வந்துடுறேம்மா
(எமி புறப்பட்டு சென்றாள்.)

(பணக்கார வீட்டில் காளிமுத்து கோபத்தில் நின்று கொண்டிருந்தான்.
எமியும் காளிமுத்து வீட்டிற்குள் நுழைந்தாள்.)

**காளிமுத்து :** ஏய், புண்ணியவதி, அந்தத் திருட்டு நாயி இதோ வந்திருச்சி நீயே கேளு.

**புண்ணியவதி :** நீங்க பேசாம உள்ள போங்க. நான் பாத்துக் கிறேன். (காளிமுத்து உள்ளே போய்விட்டான்.)

**புண்ணியவதி :** எமி, என்னப்பா இன்னைக்கு சீக்கிரமே வந்துட்ட.

**எமி:** இன்னைக்கு லீவும்மா. அதான் சீக்கிரமா வேலய முடிச்சிட்டு போயிடலாம்னு வந்தேன்.

**புண்ணியவதி :** செல்ப்ல அய்யா கை செயின கழற்றி வைச்சிருந் தாங்க பாத்தியாப்பா.

**எமி:** எனக்கு தெரியாதும் மா... நா... பாக்கல....
எமி பயந்து போய் நின்று கொண்டிருந்தாள்.

**காளிமுத்து :** கொஞ்சி, கொஞ்சி நீ கேட்டுட்டு இருந்தீன்னா பதில் சரியா வராது.

**புண்ணியவதி** : பொறுங்க

காளிமுத்து வெளியே வந்து எமியின் கையைப் பிடித்து கரகரவென்று இழுத்துக்கொண்டு வீட்டிற்குள் மெயின் காலில் கொண்டு வந்து விட்டான். புண்ணியவதி எமிக்கு முன்பாக வந்து நின்று மறைத்துக் கொண்டு நின்றாள்.

**காளிமுத்து** : நீ என்னடி அந்தத் திருட்டு நாய்க்கு வக்காலத்தா வாங்குற.

புண்ணியவதியை வேகமாக இடதுபுறத்தில் தள்ளிவிட்டு, எமியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

**காளிமுத்து** : ஏய், செயின திருடி எங்க ஒழிச்சி வைச்சிருக்க சொல்லுடி.

எமியின் கன்னத்தில் மீண்டும் அறைந்தான். எமி அழுது கொண்டே கீழே விழுந்தாள்.

எமி: **களவு செய்யாதிருப்பாயாக** என்று எங்க வேத புத்தகத்துல யாத் 20:15ல் எழுதியிருக்கு. நான் எடுக்கல.

காளிமுத்து அதிர்ச்சி அடைந்து போனான். அவன் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

எமி: அதுமாத்திரமல்ல, யாத் 20:14ல் **விபச்சாரம் செய்யா திருப்பாயாக** என்றும் எழுதியிருக்கு.

அது மாத்திரமல்ல யாத் 20:13ல் **கொலை செய்யாதிருப்பாயாக** என்றும் எழுதியிருக்கு.

அது மாத்திரமல்ல யாத் 20:16ல் **பிறனுக்கு விரோதமாகப் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக** என்றும் எழுதியிருக்கு. இது எல்லாம் கடவுளுக்கு முன்பாக பாவம். அது சாபத்தைக் கொண்டுவரும். (காளிமுத்து உண்மையிலேயே அதிர்ந்து போனான்.) படுக்கை அறையில் சென்று அப்படியே குப்புற விழுந்து படுத்துக்கொண்டான்.

அன்று மனம் வாதிக்க ஆரம்பித்தது. ஏனென்றால் ஒரு சமயம் கொலை செய்து ஒருவருக்கும் தெரியாமல் புதைத்த சம்பவம் இப்போது வெளியே வந்துவிட்டதைப் போல பயந்தான்.

பல இடங்களில் ரகசியமாக அவன் செய்த விபசாரம் இப்போது வெளியே தெரிந்தது என்று பயந்தான்.

பலவேளைகளில் பிறருடைய பொருள்களை அவர்களுக்கு தெரியாமல் எடுத்து தன் வருமானத்தை பெருக்கிக் கொண்டது வெளியே தெரிந்து விடுமோ என்று பயப்பட ஆரம்பித்தான்.

இன்னும் பல நபர்களுக்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லி தண்டனை வாங்கிக் கொடுத்த காரியத்தில் தண்டனை காலம் முடிந்த பின்பு தேடிவந்து தன்னை கொன்றுபோடுவார்களே என்று பயந்தான்.

**அப்பொழுது......**

புண்ணியவதியும் அழுதுகொண்டே எமியின் கையைப்பிடித்து தூக்கி விட்டாள். தன் சேலையின் முந்தானையால் எமியின் கண்களையும், முகத்தையும் துடைத்து விட்டாள். பதிலுக்கு எமியும் புண்ணியவதியின் கண்களை துடைத்து விட்டாள்.

எமி வீட்டுக்கு சென்று அம்மாவிடம் ஒன்றும் சொல்லவில்லை. முழங்கால் படியிட்டு இயேசுவை நோக்கி ஜெபம் பண்ண ஆரம்பித்தாள்.

**எமி**: இயேசப்பா நான் உமக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று உம்மிடத்தில் வேண்டினேன். உம்முடைய வசனங்களை என் முதலாளிக்கு சொல்ல வாய்ப்பளித்தீர் அதற்காக நன்றி செலுத்து கிறேன்.

ஏசப்பா அந்த செயின் என் முதலாளிக்கு கிடைக்க உதவி செய்யுங்க. அவர் மனம் திரும்பி பாவங்களை உணர்ந்து ரட்சிக்கப் படவும் உதவுங்க. முதலாளி அம்மாவையும் ரட்சிங்க அவர்களை ஆசீர்வதிங்க.

அவர்கள் அறியாமல் என்னை குற்றவாளியா பார்த்ததற்காகவும் என் முதலாளி என்னை அடித்ததற்காகவும் அவர்களை தண்டியாதீங்க. அவர்களை மன்னித்து ரட்சியுங்க. இயேசுவின் நாமத்தில் ஜெபிக் கிறேன். பிதாவே ஆமென்.

அன்று இரவு எமி மகிழ்ச்சியோடு உறங்கினாள்.

மறுநாள். காலை ஆறுமணிக்கு கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு ஸ்டெல்லா கதவைத் திறந்தாள்.

புண்ணியவதி நின்று கொண்டிருந்தாள்.

**புண்ணியவதி** : எமி எங்க?

**ஸ்டெல்லா** : தூங்கராம்மா. இதோ எழுப்புறேன். எமி எழுந்திரு. அம்மா தேடி வந்திருக்காங்க புள்ள.

எமி: காலையிலேயே தேடி வந்திருக்கீங்கம்மா?

**புண்ணியவதி** : உன்ன அய்யா கூட்டிட்டு வர சொன்னாங்க. எமியும் புண்ணியவதியும் புறப்பட்டார்கள்.

**காளிமுத்து** : எமி என்ன மன்னிச்சிருப்பா. நான் ஒரு பாவி.

எமி: அய்யா, இயேசப்பாதான் உங்களுக்காக தண்டனையை அவருடைய சரீரத்தில ஏத்துக்கிட்டாங்க அவங்ககிட்ட மன்னிப்பு கேட்டு அவர் இரத்தத்தினாலே கழுவ ஒப்புக்கொடுங்க.

காளிமுத்து, புண்ணியவதி, எமி மூன்று பேரும் ஜெபம் பண்ணினார்கள். காளிமுத்துவும் புண்ணியவதியும் ரட்சிப்பைப் பெற்றார்கள்.

**"நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோ 1:8-9)**

நீங்க எப்படி இருக்கீங்க?

# 13

## வெற்றியின் இரகசியம்

(பக்கத்து வீட்டு சிறுவன் ஜான் சிறுமி பெல்சியை ஸ்கூலுக்கு நேரமாகிறது என்று அவசரமாக தேடி வந்தான்).

**ஜான்** : பெல்சி, ஸ்கூலுக்கு நேரமாச்சி நீ என்ன வேதாகமத்தை கையில் வைத்து யோசித்துக்கிட்டு இருக்க. ஏற்கனவே உனக்கு மண்டையில படிச்ச பாடம் ஒன்றும் தங்காது. இது முழு ஆண்டு தேர்வு காலமாக இருக்கிறது கவனிச்சி பாட புஸ்தகங்களை படி.

**பெல்சி** : ஆமா, ஜான். எனக்கு படிக்கிற பாடம் மண்டையில ஏறல என்றுதான் வேதாகமத்துல வர்ற ஒரு வசனத்த எடுத்து படித்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

**ஜான்** : பெல்சி நீ என்ன சொல்ற?

**பெல்சி** : ஆமா, ஜான். "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்". (எரே. 33:3) என்று வேதாகமத்தில ஆண்டவர் சொல்லியிருக்கிறாரு. இவ்வளவு நாளும் என் படிப்பில தோல்வியே சந்தித்தேன். ஆனா இனிமே எனக்கு வெற்றியே கிடைக்கப்போது.

**ஜான்** : எனக்கு ஒண்ணும் புரியல. புரியற மாதிரி சொல்லு.

**பெல்சி** : உனக்கெங்கே புரிய போகிறது. நீ தான் ஒருநாளும் வேதாகமத்தையே திறந்து பார்க்கிறதில்லையே.

**ஜான்** : ஆமா, நாங்க எங்க வீட்டுல வேதாகமத்தை தொடுகிற தேயில்லை. ஏன்னா அப்பா சொல்லுவார் வேதாகமத்தை படிச்சா நம்ம விருப்பம் போல வாழ முடியாது. கர்த்தர் சொல்லுகிறார், கர்த்தர் சொல்லு கிறார் என்றே எழுதியிருக்கும். தண்ணியடிக்க முடியாது, டி.வி. பார்க்க முடியாது, சிகரட் குடிக்க முடியாது. ஆகையால் நான் வேதாகமத்தை படிக்க மாட்டேன் என்றார்.

**பெல்சி** : அம்மா படிப்பாங்கல்ல?

**ஜான்** : அம்மாவும் படிக்கமாட்டாங்க. ஏன்னா பொய் சொல்லக் கூடாது. புறங்கூறக் கூடாது. பிறருக்கு விரோதமாக சண்டை மூட்டக் கூடாது, இப்படி அது இதுன்னு எழுதியிருக்கும். அதெல்லாம் நமக்கு ஒத்துவராது. எனக்கு வேதாகமமே வேண்டாம் தூக்கித் தூரஎறின்னு சொல்வாங்க.

(ஜான் சொல்லிக் கொண்டே போனான் திடீரென்று தலை நிமிர்ந்து பெல்சியை எட்டிப் பார்த்தான். வேதாகமத்தை நெஞ்சில் வைத்துக் கொண்டு கண்ணீர்விட்டு அழுது கொண்டிருந்தாள். ஜான் அதிர்ந்து போனான்.)

**பெல்சி** : என் உயிரான ஏசு, என் உயிரான வேதாகமம். இந்த இரண்டையும் அம்மா வீசி எறிஞ்சிட்டாங்கன்னு என்று சொன்னவுடனே அத என்னால தாங்க முடியல! (ஜான் மவுனமாக தலைக் குனிந்தவாறு நின்று கொண்டிருந் தான். பெல்சி பேசினாள்)

**பெல்சி** : ஜான், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்து சாபத்திலிருந்து கஷ்டத்தி

லிருந்து விடுதலையாக்க பரலோக மேன்மையை வேண்டா மென்று உதறித்தள்ளிவிட்டு என் பிள்ளை களை சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவித்து மோட்சத்தில் சேர்க்க இரத்தம் சிந்துவேன் என்று இறங்கி வந்தாரே. முள்முடி சூட்டப்பட்ட அவர் கைகளிலும், கால்களிலும் ஆணிகளை ஏற்றுக் கொண்டு, இந்த பூமியிலே உனக்காகவும், உன் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபருக்காகவும் இரத்தம் சிந்தின அவரை வீசி எறிந்து விட்டீர்களே. அதுக்காகத்தான் நான் அழுதுகிட்டிருக்கேன்.

**ஜான்** : பெல்சி என்னை மன்னித்துவிடு, என் குடும்பத்தை மன்னித்துவிடு.

**பெல்சி** : நான் மன்னிக்க நானா சிலுவையில் அறையப் பட்டேன்? உனக்காகவும், உன் குடும்பத்திற் காகவும் இயேசு தான் இரத்தம் சிந்தினார். அவரிடம் மன்னிப்புக்கேள்.

(ஜானும், பெல்சியும் சிலுவையை நினைவிலே கொண்டு வந்து பாவமன்னிப்புக்காக ஜெபித்தார்கள். ஜானும் ஏங்கி, ஏங்கி அழுது பாவ மன்னிப்பை பெற்றுக் கொண்டான். ஜான் குடும்பத்திற்காக இரண்டு பேரும் ஜெபம் செய்தார்கள். முழு ஆண்டுத் தேர்வின் வெற்றியை நோக்கி இரண்டு பேரும் நடந்தார்கள்.

# 14

## உண்மையால் கிடைத்த ஆசீர்வாதம்

பாபு ஒரு இந்து குடும்பத்தை சேர்ந்த பையன். அவனுக்கு அப்பா கிடையாது, அம்மா மட்டுமே உண்டு. ஒரு கிறிஸ்தவ பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பு படித்து வந்தான். எப்பொழுதும் அவன் உள்ளத்தில் ஒரு இருள் சூழ்ந்த நிலையில் தான் ஒரு ஆதரவற்றவன் என்றும், தனக்கு உதவி செய்வதற்கு இந்த உலகத்தில் ஒருவரும் இல்லை என்ற உணர்வுடனும் இருப்பான்.

அவன் படித்தது கிறிஸ்தவ பள்ளி என்பதால் தினசரி ஒரு வேதவசனம் ஸ்கூல் முன்பாக போர்டில் எழுதியிருக்கும். அதைப் படிக்கும் போதும், நினைக்கும்போதும் மட்டும் யாரோ ஒரு நபர் தன்னோடு இருப்பதைப் போல உணர்ந்து கொள்வான். நிச்சயமாகவே வரும் நாட்களில் தன் வாழ்க்கையில் வெளிச்சம் உண்டு என்று திருப்திபட்டுக் கொள்ளுவான். பள்ளியின் இடைவேளையின் போது அவனுடன் படிக்கும் மற்ற பையன் களும் பிள்ளைகளும் விதம் விதமாக தின்பண்டங்களை வீட்டில் இருந்து கொண்டுவந்தும் கடைகளில் வாங்கியும் தின்று கொண்டு இருப்பார்கள். ஆனால் பாபுவுக்கு ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். அவனுக்கு கையில் காசு இல்லாததினாலும் வீட்டில் அம்மாவால் தின்பண்டங்கள் செய்து கொடுக்க பணம் இல்லாததினாலும், ஏமாற்றத்தோடு ஏக்கமுடன் பார்த்துக் கொண்டே இருப்பான்.

மற்ற மாணவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் வீட்டில் நடந்த சம்பவங்களைச் சொல்லி சந்தோஷமாய் பேசி, சிரித்து மகிழும் போது தன் வாழ்க்கையில் இப்படிப்பட்ட நிறைவான சந்தோஷம் இல்லையே என்று வெதும்பிக்கொண்டு இருப்பான்.

நாட்கள் கடந்தன. அன்று சனிக்கிழமை என்பதால் மதியத்திற்கு மேல் பள்ளி விடுமுறை. பள்ளியிலிருந்து வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது வேகமாக ஒரு டூவீலர் அவனை கடந்து சென்றது. அதில் இருந்து ஒரு பை கீழே விழுந்தது. வண்டியை ஓட்டிவந்த நபர் இமைப் பொழுதில் சென்றுவிட்டார்.

பாபு பையை எடுத்தான். நேராக வீட்டிற்குச் சென்று அம்மாவிடம் கொடுத்துவிட்டு நடந்த விபரங்களை சொன்னான்.

**பாபுவின் அம்மா** : என்ன பாபு, பையில என்ன கொண்டு வற்றப்பா யார் கொடுத்தாங்க?

**பாபு** : ஒரு அண்ணன் வண்டியில் போகும் போது கீழே விழுந்துச்சிம்மா. (பாபு அம்மாவிடம் கொடுத்தான்.)

இரண்டுபேரும் பையைப் பிரித்துப் பார்த்தார்கள். உள்ளே முழுவேதாகமம் ஒன்றும், அதற்குள் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக ஆறும் இருந்தது. அந்த நபருடைய வீட்டின் விலாசமும் பெயர் டேவிட் என்றும், அவர் ஒரு போதகர் என்று இருந்தது.

**பாபு** : அம்மா இதை என்ன பண்றது?

**பாபுவின் அம்மா** : பொறு பார்க்கலாம் யாராவது தேடிவந்தா கொடுக்கலாம்.

**பாபு** : அதான் அட்ரஸ் இருக்குல்ல கொண்டு கொடுத் துடலாம்மா.

**பாபுவின் அம்மா** : இன்னிக்கு சாப்பாட்டுக்கு கூட வழி இல்லாம் உட்கார்ந்திருந்தேன். இதப்பார்த்ததுக்கப்புறம் தான் எனக்கு நிம்மதியா இருக்கு.

**பாபு** : அம்மா இது கடவுளோட ஊழியக் காரங்களோடதும்மா நாம் அப்படியெல்லாம் பண்ணக்கூடாதும்மா.

**பாபுவின் அம்மா** : நான் நேத்து கோயிலுக்கு போயி நம்ம சாமி கிட்டவேண்டிக்கிட்டேன்டா. எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு. சாப்பாட்டுக்குக்கூட வழியில்ல. அதனால நீதான் எனக்கு ஏதாகிலும்

பண்ணணும்னுகேட்டேன். நம்ம சாமி தாண்டா அந்த மனுஷன் மூலமா போட்டுருக்கு.

**பாபு** : அம்மா எங்க டீச்சர் எல்லாவற்றிலும் உண்மையா இருக்கணும்னு சொல்லுவாங்கம்மா.

**பாபுவின் அம்மா** : போடா லூசுப்பயலே. உனக்கு ஒண்ணும் தெரியாது. நீ சின்னப்பையன். அந்த டீச்சர் ஸ்கூல்ல சொல்லியிருப் பாங்க. ஆனா அவங்களுக்கு இப்படி சந்தர்ப்பம் கிடைச்சா விடமாட்டாங்க. தெரியுதா.

**பாபு** : இல்லம்மா அப்படி செய்யறது தவறுன்னு என் மனசுக்கு தோணுது. அப்படி செய்யறது பாவம்னு எங்க டீச்சர் சொல்லியிருக்காங்க.

**பாபுவின் அம்மா** : கண்டால் எடு. கேட்டால் கொடுன்னு தான் பழிமொழியே சொல்றாங்க. நான் என்ன கொடுக்கவேண்டாம்னா சொல்றேன். வந்து கேட்டால் கொடுப்போம், இப்போ உள்ளே வைக்கிறேன்.

**பாபு** : எங்க ஸ்கூல்ல போர்டுல இன்றைக்கு கூடவாசித்தேன் **“உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங் களைப் பெறுவான்” என்று எழுதியிருந்ததும்மா.**

பாபு சொல்வதைக் கேளாமல், பாபுவின் அம்மா வீட்டில் உள்ள தகர பெட்டிக்குள் வைத்தார்கள். ஆனால் பாபுக்கோ, மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது. பையை நாம் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வந்ததே தன்னுடைய தவறு என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். எப்படியாவது அந்த பையையும் அதில் உள்ளவைகளையும் போதகரிடம் கொடுக்க வேண்டும் என்று மனதில் தீர்மானம் எடுத்தான்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையானதால் பாபுவுக்கு ஸ்கூல் லீவு. ஆகையால் இன்று எப்படியாவது பையை போதகரிடம் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்று பாபு உற்சாக மடைந்தான்.

ஞாயிற்றுக்கிழமையும் வந்தது.

**பாபுவின் அம்மா** : டேய் பாபு.

**பாபு** : என்னம்மா?

**பாபுவின் அம்மா** : அம்மா வேலைக்கு போயிட்டு வற்றேம்பா. வர்றதுக்கு நாலு மணி ஆகும். தகரப் பெட்டிக்குள்ள அந்த பையும் பைபிள்குள்ள ரூபாய் எல்லாம் இருக்கு பெட்டிக்கு பூட்டு இல்ல. அதனால வீட்டை திறந்து போட்டுட்டு எங்கேயாவது விளையாட போயிடாதப்பா சரியா....?

**பாபு** : சரிம்மா

பாபுவின் அம்மா வேலைக்கு சென்ற உடன் பையை எடுத்துப்பார்த்தான். உள்ளே பைபிள் இருந்தது. பிரித்து பார்த்தான். ஆயிரம் ரூபாய் நோட்டு ஆறும் அப்படியே இருந்தது. பைபிளில் இருந்த அட்ரசை கவனித்தான். அது பக்கத்தில் உள்ள கிராமமாக இருந்தது. பையை எடுத்துக்கொண்டு கிராமத்தை நோக்கி நடந்தான். சீக்கிரத்தில் வந்து சேர்ந்து விட்டான். அது ஒரு ஜெபவீடாய் இருந்தது. அன்று ஞாயிறு ஆராதனை நடந்து கொண்டிருந்தது. பாபு அந்த ஜெபவீட்டின் முன்பு மரத்தடியில் பையுடன் உட்கார்ந்தான். பாடல் ஆராதனை முடிந்து செய்திவேளை ஆரம்பமானது. போதகர் செய்தி கொடுப்பதற்காக எழுந்து நின்று ஜெபம் செய்தார். ஜெபம் செய்துவிட்டு போதகர் மத்தேயு 25:21 எடுத்தவர்கள் வாசியுங்கள் என்றார்.

**மற்றவர்** : அவனுடைய எஜமான் அவனை நோக்கி; **நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்.**

**போதகர்** : அன்பான தேவனுடைய பிள்ளைகளே நம்முடைய தேவன் இன்றைக்கு நம்மோடு பேசுகிற வார்த்தையானது, கொஞ் சத்திலே உண்மையாயிருந்தால் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் என்பது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்த பொழுது இந்த உலகத்தில் உள்ள ஜனங்களின் அநீதியை தன்மேல் ஏற்றுக்கொண்டு, பாவங்களை தன் மேல் ஏற்றுக்கொண்டு, சாபங்களை தன்மேல் ஏற்றுக்கொண்டு, வேதனைகளையும், வெறுமையையும், கஷ்டங்களையும், நஷ்டங்

களையும், நோய்களையும் தன்மேல் ஏற்றுக்கொண்டு நம் ஒவ்வொரு வரையும் அவர் விடுதலையாக்கியிருக்கிறார். ஆனாலும் இன்றுவரை அநேகர் அறியாமலும் விசுவாசியாமலும் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். மேலே உள்ள வசனத்தின் படி இயேசு சொல்வதைக் கவனியுங்கள். கொஞ்சத்திலே உண்மையாயிருந்தால் அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உண்மையாய் இருக்கும் போது அதிகாரம் கிடைக்கிறது. கடவுளுக்கு முன்பாக உண்மையாக பாவங்களை ஒத்துக்கொண்டு அதைவிட்டு விலகும் போது ரட்சிப்பு கிடைக்கிறது. இப்ப உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்கிறான். அப்படியானால் உண்மை எவ்வளவு அவசியம் பாருங்கள். இப்படி போதகர் இன்னும் பல வசனங்களை விளக்கி சொல்லி செய்தியை முடித்தார்.

(ஆராதனை முடிவு பெற்றது. ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக கலைந்து சென்றார்கள். பாபுவும் எழுந்து ஜெப வீட்டிற்குள் வந்து போதகர் முன்பாக நின்றான்.)

**போதகர்** : தம்பி நீ யார் எங்கேயிருந்து வருகிறாய்? நீ வைத்திருக்கும் பை என்னுடையது மாதிரியிருக்கிறது. உள்ளே என்ன இருந்தது என்று பார்த்தாயா.

**பாபு** : ஆமாண்ணே. சனிக்கிழமை ஸ்கூல் விட்டு நான் வரும் போது நீங்க டூவீலர்ல என்னை கடந்து போனீங்க. அப்ப இந்த பை உங்க வண்டியிலிருந்து கீழே விழுந்தது. நான் எடுத்துகொண்டு போனேன். அதுல இருந்த அட்ரஸ் பார்த்து இங்கு கொண்டுவந்தேன். இந்த பைக்குள்ள பைபிளும் அதுக்குள்ள ஆயிரம் ரூபாய் நோட்டு ஆறும் இருக்குது.

**போதகர்** : தம்பி நீ ரூபாயை பார்த்தபின்பும் இந்த பையோட சேர்த்து அதை என்னிடம் கொண்டு வந்ததால். உண்மையிலேயே நீ வருங்காலத்தில் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனாய் உயர்ந்திருப் பாய். நன்மையும், கிருபையும் உன்னைத் தொடரும் தம்பி உன்பேர் என்னப்பா?

**பாபு** : என் பெயர் பாபு

**போதகர்** : உனக்கு எந்த ஊர் தம்பி?

**பாபு** : பக்கத்து ஊர்தாண்ணே

**போதகர்** : சரி உன் அப்பா, அம்மா எங்க இருக்காங்க?

**பாபு** : அப்பா இல்ல. என் உடன்பிறந்தவங்கன்னு யாரும் கிடையாது. அம்மா மட்டும் தான் இருக்காங்க.

**போதகர்** : அம்மா கூடவந்தாங்களா? அவங்க என்ன பண்றாங்க?

**பாபு** : அம்மா கூலி வேலைக்குதான் போவாங்க. இன்னிக்கும் வேலைக்குதான் போயிருக்காங்க.

**போதகர்** : உங்கவீட்டு அட்ரசைச் சொல்லுப்பா நான் எழுதிக் கிறேன். நான் உங்கவீட்டுக்கு வந்து ஜெபம்பண்ணணும். இன்னிக்கு சாயங்காலம் வருவேன் ரெடியா இருக்கணும் சரியா.

பாபு அட்ரசைச் சொல்ல போதகர் டைரியில் எழுதி வைத்துக் கொண்டார்.

பாபுவின் வீட்டில் நாலுமணிக்கெல்லாம் பாபுவின் அம்மா வேலை முடிந்து வீட்டிற்கு வந்து விட்டார்கள். தகரப்பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். அங்கே பையும் இல்லை பைபிளும் இல்லை. பணமும் இல்லை. பாபுவின் அம்மாவுக்கு ஆத்திரம் பொங்கியது.

**பாபுவின் அம்மா** : டேய் பாபு

**பாபு** : என்னம்மா?

**பாபுவின் அம்மா** : பெட்டிகுள்ள இருந்த பைய காணல எங்க இருக்கு?

**பாபு** : அத அந்த அண்ணன்ட்ட கொடுத்துட்டேன்ம்மா

**பாபுவின் அம்மா** : ராஸ்க்கல் உன்ன என்ன பண்றேன் பாரு. (பாபுவின் அம்மா கோபத்தில் பக்கத்தில் இருந்த மரத்தில் ஒரு கொம்பை

ஒடித்து பாபுவை முன்னும் பின்னுமாக கொம்பை சுழற்றி அடி அடியென்று அடித்து தன் மனதில் கோபம் தணியும் வரை அடித்தார்கள்.)

பாபுவின் உடலெல்லாம் தடித்து ரத்தம்கட்டியிருந்தது. பாபு அழுது கொண்டிருந்தான். அப்போது போதகரும் வீட்டிற்குள் நுழைந்தார். பாபு விம்மி விம்மி அழுது முகமெல்லாம் வீங்கி போய் இருந்தான்.

**போதகர்** : பாபு... பாபு...

**பாபுவின் அம்மா** : நீங்கயாரு? பாபு உங்களுக்கு எப்படி தெரியும். (பாபுவின் அம்மாவிடம் போதகர் பேசிக்கொண்டிருக்கும் போதே பாபு ஓடிவந்தான்.)

**போதகர்** : பாபு, ஏம்பா இப்படி உனக்கு என்ன ஆச்சு நீ ரொம்ப நல்லபையனாச்சே.

**பாபுவின் அம்மா** : சொன்னபடி ஒன்றும் கேக்கமாட்டேன்ங்ரான். இத செய்யாதே என்றால் அதைத்தான் செய்கிறான். இதை செய்ன்னா செய்யமாட்டேங்ரான். நானும் பாபுவோட அப்பா இறந்து போன பின்பு கூலி வேலை செய்து தான் பிழைப்பு நடத்துரேன்ங்க. சில நாட்கள் நல்லசாப்பாடு. சில நாட்கள் பாபுவுக்கு மட்டும் ஏதாவது கொடுத்துட்டு பட்டினிதான். இப்படிதான் எங்க பொழப்பு. இப்படி வாழ்வதை விட செத்து தொலைக்கலாம்னு இருக்கு. இந்த ஒரு பையனுக்காக நான் இன்னும் உயிரோட இருக்கிறேன்.

பாபுவும் பாபுவின் அம்மாவும் சேர்ந்து அழுதார்கள்.

**போதகர்** : அம்மா. அழாதீங்க **"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக் கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"** என்று இயேசு சொல்லி யிருக்கிறார். அம்மா நீங்களும் பாபுவும் இயேசுவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் உங்கள் குறைவுகளை எல்லாம் நீக்கி உங்கள் வாழ்க்கையில் நிறைவை கொண்டுவருவார். இயேசு உங்களுக்காக மரித்திருக்கிறார். இன்றும் பிழைத்திருக்கிறார்.

உங்களையும் பாபுவையும் பார்த்துக்கொள்ளுவார். உங்கள் கவலை களையெல்லாம் அவர் மேல்வைத்து விடுங்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

பின்பு போதகர் பைபிள் ஒன்றை எடுத்து பாபுவின் அம்மாவிடம் கொடுத்தார். அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு அதைதிறந்து பார்த்தார்கள் அதின் உள்ளே ஆயிரம் ரூபாய் நோட்டுகள் ஆறும் அப்படியே இருந்தது. உடனே நன்றி பெருக்குடன் முழங்கால் படியிட்டு இயேசுவை நோக்கி போதகர், பாபுவின் அம்மா, பாபு மூன்று பேரும் ஜெபித்தார்கள்.

**பாபுவின் அம்மா** : ரொம்ப நன்றி ஐயா

**போதகர்** : இயேசுவுக்கு நன்றி செலுத்துங்கள் நான் ஒன்றும் இல்லை. இனி பாபுவை படிக்கவைத்து அவனை கவனிப்பது என் பொறுப்பு.

(பாபுவின் அம்மா மகனை அடித்தற்காகவும் போதகரின் பணத்தின்மேல் ஆசை வைத்ததற்காகவும் மனம் கசந்து, அழுது பாவமன்னிப்பைப் பெற இயேசுவை நோக்கி ஜெபம் பண்ணினார்கள்.)

**இனி ஒரு சாபமுமிராது (வெளி 22:3).**

# 15

# VBS மூலம் சிறுவர்கள் பெறும் ஆசீர்வாதங்கள்

முழு ஆண்டு தேர்வு முடிந்து ஸ்கூல் லீவு விட்டபடியால் ரூபனும், சேகரும் விளையாடச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அங்கு,

சுமதியும், நான்சியும் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது,

நெல்சன் வேதாகமத்தை வைத்தபடி எதிரே நடந்து வந்து கொண்டிருந்தான்.

**சேகர்** : நெல்சன் நீ விளையாட வரலியா?

**நெல்சன்** : இல்ல சேகர். எங்க சர்ச்ல VBS நடந்திட்டுருக்கு. அது முடிந்த பின்பு தான் விளையாட வருவேன்.

**சேகர்** : ரூபன் என்னோட வர்றான். அவனுக்கு VBS கிடையாதா?

**நெல்சன்** : அத நீதான் அவன்கிட்ட கேட்கணும். சரி நான் போயிட்டு வந்துடுரேன்டா.

**சேகர்** : சரி சீக்கிரமா வந்துடு

நெல்சன் தொடர்ந்து நடந்தான்.

**சுமதி** : ஏய் நான்சி, அங்க பாரு நெல்சன் பைபிள் தூக்கிட்டு வர்றான். நீ யெல்லாம் சர்ச்சிக்கு போகலையா?

**நான்சி :** எங்க வீட்ல நாங்க யாரும் போறதில்லை. அப்பா வேணாம்னுவாங்க. அம்மாவும் அதெல்லாம் நமக்கு ஒத்து வராதுன்னுருவாங்க.

**சுமதி :** ஞாயிற்றுக்கிழமை சர்ச்சிக்கு போவீங்கல்ல.

**நான்சி :** நாங்க கிறிஸ்மஸ் பண்டிகை, ஈஸ்டர் பண்டிகை இப்படி நாள்லதான் போவோம். அன்னிக்கு புது டிரஸ் உடுத்திட்டு போயிட்டு வருவோம். அவ்வளோதான்.

இப்போது நெல்சன் பக்கத்தில் வந்து கொண்டிருந்தான்.

**சுமதி :** நெல்சன் நில்லு. நானும் உங்கூட வரவா. அங்க சர்ச்சில என்ன என்ன நடக்கும்?

**நெல்சன் :** அங்க, பெரிய அக்கா, பெரிய அண்ணன்மார்லாம் எங்களுக்கு பைபிள்ல உள்ள காரியங்கள விளக்கிச் சொல்லிக் கொடுப்பாங்க. நல்லா பாட்டு சொல்லிக் கொடுப்பாங்க. ரொம்ப நல்லாயிருக்கும். நேரம் போரதே தெரியாது.

**சுமதி :** நான்சி நீயும் வர்றியா நாமும் போவோம்.

**நான்சி :** நீ வேணும்னா போ. நான் வரல நமக்கு சரிவராது ஒரே தூக்கமா வரும். அவங்க என்னன்னமோ சொல்லுவாங்க. ஒண்ணுமே புரியாது.

**சுமதி :** நீ என்ன கிறிஸ்தவ குடும்பத்தில பிறந்த உனக்கு ஒண்ணும் புரியாதுன்னு சொல்ற?

**நான்சி :** ஆமாடீ எங்கவீட்ல நாங்க கிறிஸ்தவத்ல அதிக ஈடுபா டோடே இருக்கமாட்டோம்.

**சுமதி :** ஏன் எதுக்கு?

**நான்சி :** அப்பா எப்போதுமே இப்படி சொல்லுவாங்க. நமக்கு எல்லாமே ஒண்ணுதான். எல்லாகடவுளும் ஒண்ணுதான். சர்ச்சுக்கு போயிதான் கடவுள தேடனும்னு இல்ல. போறவழியில எந்த சாமிய

பார்த்தாலும் மனசுல நினச்சிகிட்டா போதும்பாங்க. அம்மாவுக்கு அதுவும் பிடிக்காது. கடவுள் அது இதுன்னு ஏமாத்திட்டுருப்பாங்க. சர்ச்சிக்கு போயிட்டு வர்றதுக்குள்ள நம்ம சொந்தவேலய எவ்வளவோ செய்து முடிச்சுடலாம்பாங்க.

சுமதி புறஜாதி பொண்ணாயிருந்தாலும் கடவுளுக்கு பயந்த சிறு பெண். நான்சி இப்படி சொன்னதும் அவள் இருதயம் துக்கமடைந்தது. கண்களிலிருந்து கண்ணீர் வந்து கொண்டிருந்தது.

**நெல்சன்** : சுமதி, ஏன் அழற. உன் கண்களிலிருந்து கண்ணீர் வருது. (நெல்சன் துடைத்துவிட்டான்.)

சேகரும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்.

**சேகர்** : டேய் ரூபன் இதோ வர்றேண்டா.

(சேகர் நெல்சனை நோக்கி வந்தான்)

**சேகர்** : நெல்சன் நானும் உங்ககூட வர்றேன்டா.

**சுமதி** : நானும் உங்கூட வர்றேன்.

**நெல்சன்** : சரி போவோம் வாங்க.

மூன்று பேரும் VBS கிளாஸ்குள் புகுந்தார்கள். வகுப்பும் ஆரம்பமானது.

**VBS டீச்சர்** : பிள்ளைகளா சத்தம் போடக்கூடாது. நம்ம இயேசுவை நோக்கி ஜெபம் பண்ணப் போறோம். நான் ஜெபம் பண்ணுவேன். நீங்க இயேசப்பாவை சிலுவைல அறையபட்டவரா உங்க நினைவுல கொண்டு வந்து அவரையே பார்க்கணும் சரியா.

**பிள்ளைகள்** : சரி டீச்சர்.

**டீச்சர்** : ஏசப்பா இந்த பைபிள்ள உள்ள வார்த்தைகள எங்களுக்கு விளக்கிதாங்கப்பா. இதில உள்ள ஆசீர்வாதமெல்லாம் எங்களுக்கு கிடைக்கட்டும்பா. எங்களுக்காக சிலுவையிலே இரண்டு கைகளிலும் ஆணிகளால் அடிக்கப்பட்டீங்கப்பா. எங்களுக்காக உங்க

விலாவுல ஈட்டியால் குத்தப்பட்டீங்கப்பா. எங்களுக்காக உங்க தலையில் முள்கிரீடம் வைத்து கோலால் அடிக்கப்பட்டீங்கப்பா. இது எல்லாம் நாங்க செய்த பாவங்களுக்காக. எங்க அப்பா, அம்மா அவர்களுடைய முன்னோர்கள் மூலமாக வந்த சாபங்களுக்காக அதன் மூலமாக வந்த நஷ்டங்களுக்காக, இழப்புகளுக்காக தோல்விகளுக்காக எங்களுடைய மீறுதல்களுக்காக, அக்கிரமங்களுக்காக, நோய்களுக்காக உம்முடைய சரீரம் முழுவதும் வாரினால் அடிக்கப்பட்டு உம்முடைய சதைகள் எல்லாம் பிய்க்கப்பட்டு ஒழுகிவரும் இரத்தம் எங்கள் சரீரங்களை, எங்கள் ஆத்துமாக்களை, எங்கள் ஆவிகளை கழுவி சுத்தம் பண்ணும் படி வேண்டிக்கொள்கிறோம்ப்பா. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் என்று நீர் எழுதி கொடுத்த வேத புத்தகம் சொல்கிறது. அப்படியே செய்வீராக. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்.

மறுபடியும் டீச்சர்.

**டீச்சர்** : பிள்ளைகளே, நான் சொன்ன இந்த ஜெபத்தை நீங்கள் ஒவ்வொருவரும் உங்க சத்தம் வெளியில கேட்கும்படியாக இயேசுவை நோக்கி சொல்லுங்க, சரியா.

**பிள்ளைகள்** : சரி டீச்சர்.... அப்படியே சொல்லி ஜெபிக்கிறோம்.

பிள்ளைகளும் ஜெபம் செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டார்கள்.

சாத்தானின் வஞ்சகத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களைக் குறித்தும் இரண்டு பாடல்களை சொல்லி கொடுத்து பிள்ளைகளுக்கு VBS புஸ்தகங்களையும், தின்பண்டங்களையும் கொடுத்து அனுப்பினார்கள்.

நெல்சன், சேகர், சுமதி மூன்றுபேரும் மகிழ்ச்சியோடு வந்து கொண்டிருந்தார்கள்.

ரூபனும், நான்சியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

**சுமதி** : ஏய் நான்சி, VBS எவ்வளவு நல்லாயிருந்தது தெரியுமா. ஏசப்பாவ துதித்து பாடும் போது எவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்திச்சி.

நான் பரிட்சைல நல்ல மார்க் எடுப்பேன்னு நம்பிக்கை வந்திருச்சி. ஆமா.

**சேகர்** : எனக்குந்தான் ரூபன். இனி என் வாழ்க்கைல எல்லாமே வெற்றிதான் என்கிற ஒருவித பெலன் எனக்கு வந்திருச்சி.

ரூபனும், நான்சியும் ஒன்றும் புரியாதவர்களாக நெல்சன், சேகர், சுமதி மூன்று பேரின் முகத்தையே பார்த்துக் கொண்டே நின்றார்கள். பின்பு எல்லாரும் பிரிந்து சென்றார்கள்.

(சுமார் ஏழு ஆண்டுகளுக்கு பின் ஒருநாள்)

ரூபன், சேகர், நெல்சன், சுமதி, நான்சி ஐந்து பேரும் சந்தித்துக் கொள்ளும்படியான ஒரு வாய்ப்பு கிடைத்தது.

**நெல்சன்** : ரூபன் நீ அடுத்து என்ன பண்ணலாம்னு ஐடியா?

**ரூபன்** : ஒரு ஐடியாவும் இல்லடா அந்த அளவுக்கு குழம்பி போய் இருக்கிறேன். பிளஸ்டூல மார்க்கு ரொம்ப கம்மி. காலேஜ்ல சேரணும்னா சிபார்சுக்கு ஆள் இருந்தாதான் சேத்துகிடுவாங்கற நிலைதான்.

**நெல்சன்** : நான்சி நீ எப்படியிருக்க அடுத்து என்ன பண்ண போற?

**நான்சி** : வெளிய சொன்னா வெக்கம் மார்க் ரொம்ப கம்மி. படிப்பும் மண்டைல ஏறமாட்டேங்குது.

**சேகர்** : சுமதி. நீ என்ன பண்ணப்போற?

**சுமதி** : பி.இ. பண்ணலாம்னு நினைக்கிறேன்.

**சுமதி** : நீ என்ன பண்ணப்போற சேகர்?

**சேகர்** : நான் எம்.பி.ஏ. பண்ணப்போறேன்.

**நெல்சன்** : எல்லோரும் என்னப்பத்தி விசாரிக்கவே இல்லையே. (எல்லாரும் மொத்தமாக சிரித்தார்கள்.)

**சுமதியும் சேகரும்** : நீ என்ன பண்ணுவாய் என்பதை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முன்பே தீர்மானம் பண்ணி

வைத்திருக்கிறார். நீ நல்ல ஜாப்பில சேர்ந்த பின் எங்களையும் நினைச்சுக்கோ.

**ரூபனும், நான்சியும்** : எங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**நெல்சன்** : வாருங்கள் எல்லோரும் மொத்தமாக ஜெபிப்போம்.
ஐந்துபேரும் முழங்கால் படியிட்டார்கள். நெல்சன் ஜெபம் பண்ணினான்.

**நெல்சன்** : இயேசப்பா நாங்க ஐந்து பேரும் உமக்கு முன்பாக நிற்கிறோம்பா. நானும், சுமதியும், சேகரும் உயர்ந்த படிப்புக்கு வழிசெய்ததற்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஆனாலும் ரூபனும், நான்சியும் படிப்பில் பின்தங்கியபடியால் படிப்பை தொடர முடியவில்லையே என்று மனவேதனைபடுகிறதை நீர் அறிவீர்ப்பா. அவர்களுக்கும் நீர் உதவிசெய்யும்பா. அவர்களையும் உயர்த்துங்கப்பா.

(நெல்சன் ஜெபம் செய்யும் பொழுதே ரூபனும், நான்சியும் மனம் வருத்தப்பட்டு கண்ணீர் விட்டு அழுதார்கள். தாங்கள் சிறுவயதில் இயேசுவை மறுதலித்ததினால் நம்வாழ்வு பின்தங்கி விட்டதே என்று வேதனைப்பட்டார்கள்).

நெல்சன் ஜெபத்தை தொடர்ந்தான்.

ஏசா அன்று சுதந்திர பங்கு வீதத்தை அசட்டை பண்ணினதினால் ஆசீர்வாதத்தை இழந்து போனது போல ரூபனும், நான்சியும் வாழ்க்கையில் உயர்ந்த இலக்கை அடையாமல் போய் விடாதபடி வேறு ஒரு வழியை காண்பித்து அவர்களை உயர்த்தும். ஏசாவின் நாட்களில் நீர் தோன்றி மரிக்கவில்லை. இப்போதோ எங்கள் தோல்விகளுக்காக மரித்திருக்கிறீர். அவர்களையும் ஆசீர்வதியும். நீர் சிந்தின இரத்தம் எங்கள் எல்லோரையும் கழுவி, சுத்திகரிக்கட்டும். பரிசுத்த ஆவியானவர் எங்களை ஒரே ஆவியினால் நிரப்பும். இந்த ஜெபத்தை கேட்டு அப்படியே நீர் செய்த படியால் உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**நான்சியும், ரூபனும்** : எங்கள் வாழ்க்கையையும் இயேசுவுக்கு ஒப்பு கொடுத்து விட்டோம்.

**நெல்சன்** : கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

(எல்லாரும் பிரிந்தார்கள்).

(மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு பின் ஒருநாள் ஐந்து பேரும் ஒருவரை ஒருவர் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது).

**நெல்சன்** : ஹாய்! சுமதி, சேகர், நான்சி, ரூபன் எப்படியிருக்கீங்க?

**ரூபன்** : நாங்கள் தினம் தோறும் ஜெபிக்கிறோம்.

**நான்சி** : ஆமா நெல்சன். எங்க வீட்ல நான் இயேசுவை ஏற்றுக் கொண்டபின் எல்லோரும் இரட்சிக்கப்பட்டார்கள். நான். பி.ஏ. தமிழ் படிக்கிறேன். அடுத்து பி.எட் படிக்கலாம்னு நினைக்கிறேன். எல்லாம் இயேசப்பாவின் கிருபை தான்.

**ரூபன்** : ஆமாடா. நான் பி.ஏ. ஹிஸ்ட்றி படிக்கிறேன். அடுத்து பி.எல் பண்ணனும்டா. அன்றைக்கு நம்ம ஜெபத்தைகேட்ட இயேசப்பா என்ன வெக்கப்பட்டு போகாதபடி காத்து கொண்டார்.

**சுமதி, சேகர்** : கர்த்தர் எங்களை உயர்த்தியதற்கு அன்றைக்கு VBSக்கு நெல்சன் எங்களை கூட்டிட்டு போனதே காரணம்.

**நெல்சன்** : வாங்க, எல்லோரும் ஜெபம் பண்ணுவோம்.

மீண்டும் கூடி ஜெபித்தார்கள்.

பரிசுத்த ஆவியானவர் எல்லார் மேலும் இறங்கினார்.

**“இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்” (மத் 18:20)**

# 16

## நீ ஒரு பணக்கார சிறுமியா?
## நீயும் தேவனுக்கு ஊழியம் செய்யலாமே!

சுதா, ஒரு பணக்கார வீட்டு கிறிஸ்தவ சிறுபெண்.

லட்சுமி என்ற கண்பார்வை சரியில்லாத சிறுமி பக்கத்துவீட்டு பெண். இருவரும் சிநேகிதிகள். சுதா ஸ்கூல் முடித்து வீட்டுக்கு வந்தவுடன் வீட்டு பாடம் எழுதி முடித்துவிட்டு, தினசரி லட்சுமியை சந்திப்பது வழக்கமா யிருந்தது.

லட்சுமி வீட்டுக்கு ஒரே பெண்குழந்தைதான். அப்பா, அம்மாவுக்கு அவள் நிமித்தம் மிகுந்த பாரம். அவளையும் கவனிக்க வேண்டும், கூலி வேலை செய்து பிழைப்பும் நடத்த வேண்டும் இவ்விதமான குடும்பம்.

லட்சுமியை சொந்தக்காரர்கள் யாரும் கவனிக்க மாட்டார்கள். தனிமையில் உட்கார்ந்து மற்றவர்கள் பேசுகிற வார்த்தைகளை கேட்டு மிகவும் வேதனைபடுவாள். இந்த உலகத்தில் நல்ல மனிதர்களே இல்லையே என்று கண்ணீர் வடிப்பாள்.

சுதாவின் குடும்பம் பணக்கார குடும்பமாக இருந்தாலும், தேவனுக்கு ஊழியம் செய்பவர்கள். உன்னைப் போல பிறரையும் நேசி என்ற தேவ வாக்கின்படி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். சுதாவுக்கு வசனங்களை நன்றாக போதித்து வந்தவர்கள். சுதாவின் அப்பா ஒரு ஆசிரியர். அம்மாவும் டீச்சர் தான். விடுமுறை வேளைகளில் ஊழியத்துக்கு சென்றுவிடுவார்கள். கர்த்தர் அந்த குடும்பத்தை நன்றாக ஆசீர்வதித்து வந்தார்.

அன்று குடியரசு தினத்தை முன்னிட்டு, மூன்றுநாள் தொடர்ச்சியாக விடுமுறையாக இருந்தது. சுதா, லட்சுமியை தேடி வந்தாள்.

**சுதா** : லட்சுமி

**லட்சுமி** : என்ன சுதா?

**சுதா** : இன்னைக்கு சுபம் திருமணமகால்ல ஒரு கிறிஸ்தவ ஜெபக்கூட்டம் நடக்குது நீ வர்றியா?

**லட்சுமி** : நான் எப்படி வர முடியும். எனக்கு இரண்டு கண்ணும் தெரியாது. என்னை எல்லாரும் புறக்கணிகராங்களே.

**சுதா** : லட்சுமி, மனிதர் உன்னை புறக்கணித்தாலும் இயேசு உன்னை நேசிக்கிறார்.

**லட்சுமி** : உண்மையாகத்தான் சொல்றியா. எல்லாரும் என்ன சபிக்கப்பட்டவன்னு சொல்றாங்க.

(லட்சுமி விம்மி, விம்மி அழுதாள்)

**சுதா** : யார் சொன்னது. நமக்காக இயேசு சாபத்தையெல்லாம் தன் சரீரத்தில் ஏற்றிருக்கிறார். சாபத்தில் இருப்பவர்களை விடுதலை செய்ய, தலையில் முள்முடியை வாங்கிக் கொண்டார். சாபத்தின் வேதனையை தன் தலையில் சுமந்தார் என்று வேதம் சொல்கிறது.

**லட்சுமி** : எனக்கு கண் தெரியலன்னு எல்லாரும் என்ன ஒதுக்கி தள்றாங்க சுதா.

**சுதா** : அதற்காகத்தான் அவர் தலையில் முள்முடியை வைத்து கோலால் அடித்தார்களாம். அது இயேசுவின் இரண்டு கண்கள் வழியாக இறங்கி வந்ததாம். ஆகையால் உன் வேதனையை அவர் அறிந்திருக்கிறார். அவர் உன் கவலைகளை அறிந்திருக்கிறார்.

**லட்சுமி** : அப்படீன்னா இயேசு எனக்கு கண்பார்வையை கொடுப்பாரா?

சுதா : ஆமா லட்சுமி, நீ விசுவாசித்தால் அதை காண்பாய் என்று வேதம் சொல்கிறது.

லட்சுமி : இதெல்லாம் உனக்கெப்படி தெரியும் சுதா?

சுதா : எங்கப்பாவும், எங்கம்மாவும் எனக்கு சொல்லி தந்தாங்க. நானும் வேத புஸ்தகத்தில் வாசித்திருக்கிறேன். இதோ, வேத புஸ்தகத்தில் சில வசனங்களை உனக்கு வாசித்து காட்டுறேன் பாரு.

சுதா வேத புஸ்தகத்தை எடுத்து லூக்கா 18:35-43 வரை வாசித்து காட்டினாள்.

**“பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக்கொண்டிருந்தான்.**

**ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான்.**

**நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான்.**

**முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான்.**

**இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார்.**

**அவன் கிட்டவந்தபோது, அவர் அவனை நோக்கி‘**

**நான் உனக்கு என்னசெய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன். ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்.**

**இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.**

**உடனே அவன் பார்வையடைந்து, தேவனை மகிமைப்படுத்திக் கொண்டே, அவருக்குப் பின்சென்றான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்".**

லட்சுமியின் முகத்தில் ஒரு வெளிச்சம் தோன்றியது.

**லட்சுமி :** சுதா, இருளில் இருந்த என் வாழ்க்கையில இப்ப வெளிச்சம் வந்துருச்சு.

**சுதா :** நீ என்ன சொல்ற?

**லட்சுமி :** ஆமா, சுதா, எனக்கும் இயேசு பார்வை தருவார் என்ற விசுவாசம் என் உள்ளத்தில் நீரூற்றைப்போல பொங்குது.

**சுதா :** நெஜமாவா?

**லட்சுமி :** அதுமட்டுமில்ல இந்த பொல்லாத உலகத்துல ஜனங்கள் பேசுற, செய்கிற காரியங்கள நினைச்சா அப்படியே பார்வை யில்லாமலே மரிச்சு கடவுளோட முகத்தை முதன் முதல்ல பார்க்கனு அப்படின்னு தினம் தினம் என் மனசுல நெனப்பேன். ஆனா இந்த வசனங்கள நீ எனக்குப் படிச்சுக்காட்னதுக்கப்புறம் நானும் இயேசுவுக் காக ஏதாவது செய்யனும். அதுக்காகவே நான் கண்டிப்பா பார்வையை அடைஞ்சேதீரனும் அப்படின்னு இப்ப நினைக்கிறேன் சுதா.

லட்சுமி விசுவாசத்தோடு பேசினாள். சுதாவும் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

**சுதா :** அப்படியா?

**லட்சுமி :** ஆமா சுதா, நானும் உன்னோட ஜெபக்கூட்டத்துக்கு வற்றேன்.

**சுதா :** லட்சுமி, நான் அப்பாவிடம் சொல்லி, எங்க காரை கொண்டு வர சொல்றேன். எல்லாருமா காரிலேயே போயிரலாம்.

**லட்சுமி :** சரி

சுதா வேகமாக ஓடி அப்பாவிடமும், அம்மாவிடமும் விபரங்களை சொன்னாள். சுதா, சுதா அப்பா, சுதா அம்மா மூன்று பேருமாக ஜெபிக்க துவங்கினார்கள். சுதா அப்பா ஜெபம் செய்தார்.

**சுதா அப்பா** : இயேசுவே, இப்பொழுது உம்முடைய பாதத்தில் எதற்காக வந்தோம் என்பதை நீர் அறிவீர். ஆனாலும் நீர் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள் என்று உம்முடைய வார்த்தையினால் சொல்லியிருக்கிறீர். ஆகையால் உமக்கு தெரியப்படுத்துகிறோம். ஆண்டவரே, லட்சுமி என்ற சிறுபெண்ணுக்காக நாங்கள் மூன்று பேரும் உமக்கு முன்பாக நிற்கிறோம். லட்சுமிக்கு இரண்டு கண்களும் பார்வை யடைய வேண்டும் என்று எங்கள் முழு இருதயத்தோடு உம்மிடத்தில் சொல்லுகிறோம்ப்பா. உம்முடைய இரக்கம் லட்சுமியின் இரண்டு கண் களின் மேலும் கடந்து வர வேண்டும். இன்றைக்கு ஜெபக்கூட்டத்திற்கு லட்சுமியை கூட்டிக் கொண்டு வருகிறோம்ப்பா. அவளுடைய இரண்டு கண்களையும் நீர் தொட்டு பர்திமேயுவின் இரண்டு கண்களையும் பார்வையடைய செய்த தேவன் நீர் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர் என்று வாக்குப் பண்ணியிருக்கிறீர். ஆகையால் அற்புதத்தை செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

சுதா, சுதா அப்பா, அம்மா மூன்று பேருமாக காரில் லட்சுமி வீட்டுக்கு சென்றார்கள்.

**சுதா** : லட்சுமி புறப்படுறியா

**லட்சுமி** : இதோ வந்துட்டேன்

நான்கு பேருமாக மண்டபத்திற்குள் சென்றார்கள். அங்கே தேவ ஊழியர் ஒருவர் பிரசங்கித்து கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவர் பர்திமேயு பெற்ற அற்புதத்தைப் பற்றியே பிரசங்கித்தார். செய்தி முடிந்தது. ஜெபவேளை வந்தது.

**தேவ ஊழியர்** : இயேசுவே, தேவகுமாரனே எனக்கு இரங்கும் என்று ஜெபித்த பர்திமேயுவின் கண்களை பார்வையடைய செய்த

இயேசுவே, இப்பொழுதே பிறவியிலே குருடாய் இங்கு வந்திருக்கிறவர்களுடைய கண்களை தொட்டு சுகமாக்கும். ஆண்டவரே, நீர் இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய கர்த்தர். கண் பிரச்சனையினால் உம்மிடத்தில் வேண்டிக் கொள்கிற யாவருக்கும் பார்வை கொடுத்ததற்காய் உமக்கு நன்றி. நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

அற்புதத்தை பெற்றவர்கள் மேடைக்குவரும்படி அழைப்பு கொடுக்கப்பட்டது.

முதலாவதா லட்சுமி மேடையிலேறி சாட்சி சொல்லி தேவனை மகிமைப்படுத்தினாள். கூட்டத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

**லட்சுமி :** சுதா, உனக்கு ரொம்ப நன்றி.

**சுதா :** எனக்கு வேண்டாம். தேவனுக்கு நன்றி சொல்லு. லட்சுமி கண்ணீர்வடித்தாள்.

**லட்சுமி :** லூக்கா. 18:43ம் வசனத்தில் பர்திமேயு சொன்னது போல நான் பார்வையடைந்ததினால் இயேசுவுக்குப் பின்செல்றேன். இயேசுவே எனக்கு போதும் சுதா.

சுதா, சுதா அப்பா, அம்மா, லட்சுமி எல்லாரும் கிறிஸ்துவுக்குள் மகிழ்ந்து களிகூர்ந்தார்கள்.

# 17

# நீ எப்படி ஓடிக்கொண்டிருக்கிறாய்?

அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணி இருக்கும். ரமேஷ், ராஜா இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள்.

**ரமேஷ் :** டேய் ராஜா, பக்கத்து தெருவுல ஓட்டப்பந்தயம் நடக்குது வர்றியா போய் பார்க்கலாம்.

**ராஜா :** சரி, போகலாம் வா

(இரண்டு பேரும் சேர்ந்து பேசிக்கிட்டே நடந்தனர்.)

**ராஜா :** சண்டே கிளாஸ் இன்னைக்கு நல்லா இருந்திச்சா

**ரமேஷ் :** ஆமா, அக்காமார் பாட்டு ரொம்ப நல்லா இருந்துச்சுடா

**ராஜா :** மணி அண்ணன் சொன்ன கதையும் ரொம்ப நல்லாயிருந்துச்சில்லடா?

**ரமேஷ் :** போடா உனக்கு எப்ப பாத்தாலும் மணி அண்ணன பத்திதான் பெருசா பேசணும்.

**ராஜா :** மணி அண்ணன் சொல்ற ஒவ்வொரு கதையும் நம் வாழ்க்கைக்கு எவ்வளவு பிரயோஜனமா இருக்கு தெரியுமாடா. நீ நல்லா கவனிக்கல. அதான் அப்படி சொல்ற.

**ரமேஷ் :** எனக்கென்னமோ அந்த அண்ணன் சொல்ற கதைகள் ஒன்னுமே பிடிக்கல. எப்பபார்த்தாலும் வேதம் வாசிங்க, ஜெபம்

பண்ணுங்க, இதைப் பற்றியே சொல்றாங்க. இப்ப காலமெல்லாம் மாறிகிட்டு இருக்கு அவர் அரைத்த மாவையே திரும்ப திரும்ப அரைச்சிகிட்டே இருப்பாரு. சரி மைதானம் வந்தாச்சி. அந்த ஓரத்தில் உக்காருவோம். வா....

இரண்டு பேரும் உட்கார்ந்தனர்.

விளையாட்டு ஆரம்பமானது.

மைதானத்தில் ஒருவர் மைக்கை பிடித்துக் கொண்டு பேசிக்கிட்டிருந் தார். சில கண்டிசன் குறித்துப் பேசினார்.

நூறு மீட்டர் ஓட்டபந்தயம், இதில் கலந்து கொள்பவர்கள் சரவணன், குமார், சேகர், பாண்டி, காசி, முத்து. ஆறு பேர் ஓடுகிறவர்கள். ஏழு கோடுகள் போட்டிருக்கிறது. ஓட்டபந்தயத்தில் கலந்து கொண்டு ஓடுகிறவர்கள் ஏழு கோடுகளுக்கும் இடையில் ஆறு இடைவெளியில் சரியாக ஓட வேண்டும். ஒழுங்கில்லாமல் ஓடினால் வெளியேற்றப் படுவார்கள்.

ஒரே விசில் சத்தம் வர வர கூட்டம் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

எங்கும் ஒரே சத்தமாக இருந்தது. ஓடுவதற்கு தயாராக இருந்த ஆறு பேருமே ஆறாம் வகுப்பு மாணவர்கள்தான்.

ஆறு பேரும் வரிசையாக நின்றார்கள். முதல் விசில் ஊதப்பட்டது.

ஆறுபேரும் ஆயத்தமானார்கள்.

இரண்டாம் விசில் ஊதப்பட்டது. மூன்றாம் விசிலும் ஊதப்பட்டது.

ஆறுபேரும் ஒரே சீராக ஓட்டத்தை ஆரம்பித்தனர்.

சுமார் முப்பது மீட்டர் தூரம் ஓடிக் கொண்டிருக்கும் போது குமார் முதலாவதாக ஓடி வந்து கொண்டிருந்தான்.

விளையாட்டை பார்த்துக் கொண்டிருந்த நபர் ஒருவர் ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை குமார் வந்து கொண்டிருந்த ஓடு பாதையில் ஒருவரும் கவனிக்காத வேளையில் வைத்தார்.

இப்பொழுது குமாரின் கண்கள் ஓடுபாதையில் ரூபாய் நோட்டு இருந்ததை கவனித்தது.

இப்போது குமார் தான் போக வேண்டிய இலக்கை மறந்து ஐம்பது ரூபாய் நோட்டை கவனித்ததினால் ஓட்டத்தின் வேகம் குறைய ஆரம்பித்தது. ஓடிக்கொண்டிருக்கும் போதே அந்த ஐம்பது ரூபாய் நோட்டையும் எடுத்துக் கொண்டு ஓடினான்.

இதற்குள் சேகர் குமாரை முந்தினான். தொடர்ந்து மீதமுள்ள நான்கு பேரும் குமாரை முந்தினார்கள்.

ஆனாலும் குமார் தன் இருதயத்தில் நினைத்தான். (இன்னும் நாற்பது மீட்டர் தூரம் வாய்ப்பிருக்கிறது. நான் கண்டிப்பாக முந்திவிடுவேன்.) குமார் மீண்டும் வேகமாக ஓடினான்.

இப்போது இலக்குக்கு முப்பது அடி இடைவெளியிருந்தது.

மீண்டும் ஐந்து பேரையும் முந்தி குமார் முதலாவது வர ஆரம்பித்தான்.

இப்போது குமாருக்கு என்னை ஜெயிக்க ஒருவராலும் முடியாது என்று பெருமை உணர்வு வர ஆரம்பித்தது.

ஐம்பது ரூபாய் நோட்டை போட்ட நபர் இப்போது அழகான சிறிய பிளாஸ்டிக் பாக்சை உள்ளே வெயிட்டாக இருப்பதற்கு சின்ன சின்ன கற்களை உள்ளே வைத்து குமாரின் ஓடு பாதையில் குமாருக்கு முன்பாக வீசினார்.

குமார் இப்போது பிளாஸ்டிக் டப்பாவை கவனிக்க ஆரம்பித்தான்.

இப்போது, இருபது மீட்டர் இடைவெளியே இருந்தது.

குமார் தன் இருதயத்தில் நினைத்தான் இதையும் எடுத்துக்கொண்டு முந்திவிடுவேன்.

இதோ குனிந்தான், எடுத்தான், நிமிர்ந்தான். ஓட்டத்தை அதிகப் படுத்த மூச்சை உள்ளே இழுத்துவிட்டு ஓட்டத்தை ஆரம்பித்தான். வலது கால் பெருவிரல் மடங்கியது.

அந்தோ பரிதாபம் குமார் கீழே விழுந்தான். பின்பு எழும்பவே இல்லை.

இதோ சேகர் முந்தி ஓடி வெற்றி பெற்றான். கூட்டத்தில் ஒரே ஆரவாரம். ஒரே விசில் சத்தம் சேகரை கூட்டத்தில் உயரே தூக்கி காட்டினார்கள். அவன் கூட்டத்தினரை பார்த்து கையசைத்தான்.

**ரமேஷ் :** என்னடா குமார் இப்படி ஆயிட்டான்?

**ராஜா :** அதாண்டா மணி அண்ணன் சொன்ன கதை ஞாபகம் இருக்கா.

**ரமேஷ் :** ஆமாடா, பிசாசு ஆவிக்குரிய ஓட்டத்தில் கவர்ச்சிகளை காட்டி கர்த்தருடைய பிள்ளைகளை விழத்தள்ளுகிறான் என்று சொன்னது சரியா போச்சிடா.

**ராஜா :** இப்ப சொல்லுடா மணி அண்ணன் சொன்ன வசனத்தை கவனி, நான் சொல்லுகிறேன் பார்.

**கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் தேவனால் உண்டானதல்ல. (1 யோ 2:16)**

**அதெல்லாம் பிசாசு நம்மை விழுத்தள்ள பயன்படுத்தும் கவர்ச்சிகள் புரியுதா.**

**ரமேஷ் :** ஆமாடா, இப்பதான் எனக்கு நன்றாய் புரியுது.

**ராஜா :** இதோ, மணி அண்ணனனே வந்துட்டாங்க.

**மணி :** என்ன ரமேஷ் எப்படியிருக்க? ராஜா நீ நல்லாயிருக்கியா.

**ராஜா :** ஆமாண்ணே, நீங்களும் விளையாட்டை பார்க்க வந்தீங்களா.

**மணி :** இல்லப்பா, ஊழியத்துக்கு போயிட்டு வர்றேன்.

**ரமேஷ் :** அண்ணே. என்ன மன்னிச்சிருங்கண்ணே. நான் எப்போதும் உங்க பிரசங்கத்தை குறைவாகவே பேசுவேண்ணே. ஆனா இந்த ஓட்டபந்தயத்தை பார்த்த பின்பு நான் நன்றாக உணர்ந்து விட்டேன். எனக்காக ஜெபம் பண்ணுங்கண்ணே.

ரமேஷ், மணி, ராஜா மூன்று பேரும் தனியாக சென்று ஜெபம் பண்ணினார்கள். ரமேஷ் பாவங்களை அறிக்கை செய்து இயேசுவின் இரத்தத்தினால் பாவ சாபத்திலிருந்து விடுதலையை பெற்றுக் கொண்டாள்.

(அப்போது ஒரு குரல் ஒலித்தது).

**"பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்". (பிலி 3:13.14)**

# 18

# இயேசுவையே மகிமைப்படுத்துவோம்

அன்று ஆகஸ்டு 15ம் தேதி சுதந்திரதினமாகையால் ஸ்கூல் விடுமுறை. U.K.G. படிக்கும் சிறுபிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அது மாலை ஐந்து மணி வேளையாக இருந்தது. அந்த இடம் குளிர்ந்தும் மெல்லிய இரைச்சலுடன் லேசான காற்றும் வீசிக் கொண்டிருந்தபடியால் பிள்ளைகள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை தோறும் அந்த இடத்தில் சின்னக் கூட்டமாக சேர்ந்து ஜெபித்து வேதவசனங்களை தியானிக்கும் பிள்ளைகளான ரூத், ஜெசி, விக்டர், ரூபன் நான்கு பேரும் அங்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள்.

அடுத்தபடியாக இந்த ஜெபக் கூட்டத்தை நடத்தும் கிருபாவும் வந்து சேர்ந்தான். இவன் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவன். படித்துக்கொண்டே கர்த்தருக்கு ஊழியம் செய்பவன். அதிகமாக ஜெபிப்பவன். வேத ரகசியங்களை அறிந்தவனாக இருந்தான். தனக்கென்று கர்த்தருக்குள்ளாக ஒரு கூட்டத்தை உருவாக்கி தேவனை மகிமைப்படுத்திக் கொண்டேயிருப்பான். அவனைக் கண்டவுடன்;

**ரூத்** : ஏய் ஜெசி, அதோ கிருபா அண்ணன் வந்துட்டாங்க.

**ஜெசி** : ஆமா

**விக்டர்** : என்னண்ணே, இன்னிக்கு சீக்கிரமா வந்துட்டீங்க.

**கிருபா** : மணி ஐந்து, சரியாகத்தான் வந்திருக்கிறேன்.

கிருபா, ரூத், ஜெசி, விக்டர், ரூபன் ஐந்துபேரும் வட்டமாக உட்கார்ந்தனர்.

கிருபா ஜெபம் பண்ண ஆரம்பித்தான்.

**கிருபா :** நாம எல்லோரும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நோக்கி பார்ப்போம்.

எல்லோரும் முழங்கால் படியிட்டனர்.

**கிருபா :** இயேசுவே சர்வலோகத்தின் தேவனே, நீர் இந்த உலகத்தில் ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்று மனிதனை நேசித்து எல்லா மனிதனுடைய பாவங்களையும், சாபங்களையும், நோய்களையும், துக்கங்களையும், கவலைகளையும் உம்முடைய சரீரத்திலே ஏற்றுக்கொண்டு, ஆணிகளால் அடிக்கப்பட்டு வாரினால் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்தினீரே, எங்களை ஏற்றுக்கொள்ளும். ஆண்டவரே, நீர் சிந்தின இரத்தத்தினால் இந்த ஒரு விசை எங்களை கழுவி சுத்தம் செய்யும். எங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளும். இப்பொழுது எங்கள் மத்தியிலே இருந்து எங்களுக்கு வேத வசனங்களை கற்றுத்தாரும். பரிசுத்த ஆவியானவர் எங்களுக்கு புரியும் படியாக நடத்தி உணர்த்துவாராக. அப்படியே எங்களுக்கு செய்து தருகிறதினால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேளும் பிதாவே. ஆமென்.

**மற்றவர்கள் :** ஆமென்

**கிருபா :** எல்லாரும் உட்காருங்க.

கண்விழித்து பார்த்த பொழுது தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த இன்னும் மூன்று பிள்ளைகள் இவர்களுடன் உட்கார்ந் திருந்ததை கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

**கிருபா :** குட்டிப்பிள்ளைகளா, நீங்க என்ன படிக்கிறீங்க.

**பிள்ளைகள் :** U.K.G.ண்ணே

**கிருபா :** உங்க பெயர் என்னன்னு தெரிஞ்சுக்கிலாமா?

**உமா** : எம் பேரு உமா, அவ பேரு பிரபா, அந்த பையன் பேரு குமார்.

**கிருபா** : ஒவ்வொருத்தர் பெயரும் ரொம்ப நல்லாயிருக்கு...ம்... ஏசப்பாவ உங்களுக்கு தெரியுமா?

**உமா** : தெரியாதுண்ணே

**பிரபா** : எனக்கு தெரியும். எங்க பக்கத்து வீட்டுக்காரக்கா சொல்லியிருக்காங்க.

**குமார்** : எனக்கும் தெரியும்ண்ணே. என்கூட படிக்கிற சாம் சொல்லியிருக்கான். ஏசப்பாவுக்கு சின்ன பிள்ளைங்கதான் ரொம்ப பிடிக்குமாம். சின்ன பிள்ளைங்க எங்க இருந்தாலும் தேடி வருவாராம். சின்னப்பிள்ளைகளை தூக்கி மடியில வச்சிக்கிடுவாராம். சின்னப் பிள்ளைங்க எதைக் கேட்டாலும் அது நன்மையாயிருந்தா உடனே செய்து குடுப்பாராம். அப்படீன்னு சாம் சொல்லியிருக்கான்.

**கிருபா** : பிரபா, உங்க பக்கத்து வீட்டுக்காரக்கா ஏசப்பாவ பத்தி உனக்கு என்ன சொல்லித் தந்தாங்கன்னு சொல்றியா?

**பிரபா** : ம்.... சொல்றேண்ணே.... அது... இந்த உலகத்த ஏசப்பாதான் உண்டாக்கினாங்க. நம்மல எல்லாம் ஏசப்பாதான் சிருஷ்டித்தாங்கன்னு சொன்னாங்க.

**உமா** : சிருஷ்டித்தாங்கன்னா அதுக்கு அர்த்தம் என்னண்ணே?

**கிருபா** : அதாவது இந்த உலகத்துல இருக்கிற பொருள்கள் எல்லாம் இருக்கிற ஒரு பொருளில் இருந்து அதை மாற்றி இன்னும் ஒரு பொருளாக செய்றாங்க. உதாரணமாக சொல்லப்போனால், நாம படிக்கிற, எழுதுகிற நோட்டு மற்றும் புஸ்தகங்க எல்லாம், மரங்களை வெட்டி அதை அரைத்து, அதோடு வேறு பசை போன்ற பொருள்களை சேர்த்து பேப்பர் தயார் செய்கிறாங்க. அப்புறம் அதை கட் பண்ணி நோட்டு மற்றும் புஸ்தகங்களாக தயார் செய்றாங்க. ஆனால் மரம் எப்படி உண்டானது சொல்லுங்க பாப்போம்.

**உமா** : விதையிலிருந்து....

**கிருபா** : அப்படின்னா விதை எப்படி வந்தது....?

**உமா, பிரபா, குமார்** : ஆமா... இது ஆச்சர்யம்... எங்களுக்கு நல்லா சொல்லித் தாங்கண்ணே.

**கிருபா** : இங்கே யார் வேதாகமம் வைத்திருக்கிறீர்கள். வைத்திருக்கிறவர்கள் வாசியுங்கள். ஆதி 1:11

ரூத் : **அப்பொழுது தேவன் : பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்ககடவது என்றார். அது அப்படியே ஆயிற்று.**

**பிரபா** : இயேசப்பா வாயிலயிருந்து புறப்பட்டு வந்த வார்த்தையால தான் சிருஷ்டிப்பு ஆரம்பமானதாண்ணே?

**கிருபா** : ஆமா, இயேசுவின் சிருஷ்டிப்பிலிருந்துதான் மனிதன் பல பொருள்களை மாற்றி உருவாக்கி தன்னைக் குறித்து பெருமையடித்துக் கொள்றான்.

**குமார்** : அப்படீன்னா, மனிதன் தன்னை சிருஷ்டித்த இயேசுவை உயர்த்தாமல் தானே எல்லாவற்றையும் சிருஷ்டித்தது போல போலியான எண்ணங்களை தனக்குள்ளே உருவாக்கிக் கொண்டு இயேசுவுக்கு மேலாக தன்னைத்தானே உயர்த்தினதாக தானே அர்த்தம்.

**கிருபா** : ஆமாம் சாத்தானும் இப்படித்தான் தேவனுக்கு மேலாக தன்னை உயர்த்தினான். அதனால தேவன் கோபம் கொண்டு சாத்தானை மிதித்து கீழே தள்ளினார். அவன் பாதாளத்தில் போய் விழுந்தான். அப்புறம் தேவன் பக்கத்தில் அவனால போகவே முடியல.

**உமா** : அப்படீன்னா, தன்னை தானே உயர்த்துகிற ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தகதிதானாண்ணே.

**கிருபா :** ஆமா, தன் தவற உணர்ந்து ஏசப்பாக்கிட்ட வந்து நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செஞ்சிட்டேன். இனி உம்மையே உயர்த்திப் பேசுவேன். என்னால ஒன்னும் செய்ய முடியாதுன்னு இப்ப உணர்ந் திருக்கேன்னு நாம சொன்னா மீண்டும் ஏசப்பா நம்மை ஏற்றுக் கொள்வார். ஏன்னா அவரும் மனிதா பிறந்து வாழ்ந்து மனுஷனுடைய அற்பபுத்தியை அறிஞ்சிருக்கிறதுனால ஏதோ அறியாமையினால இப்படி பேசி நடந்துக்கிறான்னு நினைச்சு நம்மல மன்னிக்கிறாரு. நம்மமேல பரிதாபப்படுகிறார்.

**குமார் :** சாத்தான் எப்படியிருப்பாண்ணே.....?

**பிரபா :** கருப்...பா...யிருப்பான் என்னண்ணே....?
(கிருபா சிரித்துக்கொண்டு)

**கிருபா :** அவன் ஏமாற்றுகிறவன்

**உமா :** எப்படிண்ணே ஏமாத்துவான்?

**கிருபா :** இந்த உலகத்திலே ஒரு பொருள் நல்ல தயாரிப்பாக யிருந்தால் உடனே போலி தயாரிப்பு அதே பெயரில் வந்து விடுகிறது. அதுபோலத்தான் சாத்தானும் போலி பரிசுத்தம், போலியான நீதி, போலியான தேவ பக்தி, போலியான கடவுள் இவைகளை காட்டி மனிதர் களை ஏமாற்றுகிறான். அதனால்தான் அவனுக்கு அந்தி கிறிஸ்து என்று ஒரு பெயர் உண்டு.

**பிரபா :** அந்தி கிறிஸ்துன்னா எண்ணண்ணே...?

**கிருபா :** வேதத்தை எடுத்து 2 தெச 2:4 எடுத்தவங்க வாசிங்க.

**ரூத் : "அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப் படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லா வற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்".**

**குமார் :** ஆலயத்துக்கு போனா இயேசுவைத் தவிர வேறே கடவுளையோ, மனிதனையோ, பொருள்களையோ, மிருகங்களையோ பறவைகளையோ தெய்வமாக வணங்ககூடாது என்னண்ணே....?

**கிருபா :** ஆமா வேதத்தை எடுத்து வாசியுங்கள். யாத்திராகமம் 20:3,4,5-ஐ வாசியுங்கள்.

**ஜெசி :** என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்... நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.

**குமார் :** ரொம்ப பயங்கரமாயிருக்குண்ணே....!

**கிருபா :** பயப்படாத, அதுக்காகத்தான் நம்முடைய கர்த்தரா யிருக்கிற இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் சிந்தி விட்டார். இப்பொழுது மனம்திரும்பி இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட ஒப்புக்கொடுத்தால் எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப் பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். ஜெபம் செய்வோம்.

எல்லோரும் ஜெபம்பண்ணி, பாவங்களை அறிக்கைசெய்து, பாவம், சாபம் எல்லாவற்றிலுமிருந்து விடுதலையானார்கள்.